ජාතික සහජීවනය, සංවාද හා රාජ්‍ය භාෂා අමාත්‍යාංශය
தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு
Ministry of National Co-existence Dialogue and Official Languages

# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# Annual Performance Report

# 2015

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2015

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு

**உள்ளடக்கம்** **பக்கம்**


01. அறிமுகம் 03 - 05

02. அமைச்சின் பிரிவுகள் மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் அமைப்பு. 07 - 11

03. அமைச்சின் பிரிவுகள் மற்றும் அவற்றின் செயலாற்றுகைகள்

03.1. தேசிய மொழிகள் பிரிவு 15-27
03.2. சமூக ஒருமைப்பாடு மற்றும் இன அலுவல்கள் பிரிவு 28-37
03.3. நிர்வாகப் பிரிவு 38-39
03.4. திட்டமிடல் பிரிவு 40
03.5. கணக்குப் பிரிவு 41
03.6. உள்ளக கணக்காய்வு பிரிவு 42

04. அரசகரும மொழிகள் திணைக்களம் மற்றும் அவற்றின் செயலாற்றுகைகள் 43 - 53

05. அரசகரும மொழிகள் ஆணைக்குழு மற்றும் அவற்றின் செயலாற்றுகைகள் 55 - 67

06. மொழிக் கற்கைகள் மற்றும் கல்விக்கான தேசிய நிறுவனம் மற்றும் அவற்றின் செயலாற்றுகைகள் 69 - 85

07. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் 87 - 89

08. அமைச்சின் கீழுள்ள வெளிநாட்டு நிதியுதவித் திட்டங்கள்

08.1.சமூக ஒத்திசைவு மற்றும் நிலைமாற்றத்திற்கான உள்ளூர் முன்னெடுப்புகள் 91 - 93

08.2.சட்ட அமுலாக்கல் நீதிக்கான அணுகு வழி மற்றும் சமூக ஒருமைப்பாட்டு வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் 94 - 96

09.நாணய ஒதுக்கீடு 97 - 101

10.முன்பணக் கணக்கு 103 - 105

11.முடிவுரை 107 - 109

# 01. அறிமுகம்

# 01.அறிமுகம்

தேசிய சகவாழ்வு¸ கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சானது 1933/13ஆம் இலக்க 2015.09.21ஆம் திகதிய விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக ஸ்தாபிக்கப்பட்டதாகும். இதற்கு முன் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டுப் பிரிவானது 1897/15ஆம் இலக்க 2015.01.08ஆம் திகதி விசேட அறிவித்தல் ஊடாக பொது நிருவாக, மாகாணசபை, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சின் கீழ் ஏற்படுத்தப்பட்டது. இருப்பினும் 2015 ஜனவரி 08ஆம் திகதிக்கு முன் இது தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சாக ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

தேசிய சகவாழ்வு¸ கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் இயக்கத் தலைவராக கௌரவ அமைச்சர் மனோ கணேசன் கடமையாற்றுகின்றார். இவ்வமைச்சு இல 40, புத்கமுவ வீதி, இராஜகிரிய எனும் முகவரியில் அமையப்பெற்றுள்ளது.

**தொலைநோக்கு**

பல்வகையினால் பலம் பெற்றதும் சகவாழ்வு மீள் நிர்மாணிக்கப்பட்டதும் அனைத்து கலாச்சாரங்களினதும் தனித்துவங்களும் பேணி போற்றப்படுகின்றதுமான இலங்கை தேசம்.

**பணிநோக்கு**

அனைத்து மக்கள் குழுக்களினதும் உரிமைகள் உறுதிசெய்யப்படுகின்றதும், ஒருவரை ஒருவர் பரஸ்பரம் மதிக்கின்றதும் சகவாழ்வுடனும் அபிவிருத்தியடைந்ததுமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்காக கொள்கைகளை உருவாக்குதல், கலந்துரையாடல்களை ஏற்படுத்தல், வழிகாட்டல், வசதியளித்தல் மற்றும் அதற்கு உரித்தான நிகழ்ச்சித்திட்டற்களை அமுல்படுத்தல்.

**தேசிய சகவாழ்வு¸ கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் செயற்பாடுகள் மற்றும் பணிகள்**

- தேசிய கலந்துரையாடல்கள் பற்றிய விடயம் மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் மற்றும் நியமிக்கப்பட்ட நிறுவனங்களின் விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயாரித்தல், மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பிடல்.

- தேசிய மொழிக் கொள்கையை அமுல்படுத்தல் மற்றும் அது தொடர்பான செயற்பாடுகள்.

- இனங்களுக்கிடையில் ஒற்றுமை மற்றும் சகவாழ்வினை ஏற்படுத்துவதற்கு தேவையான கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தி அமுல்படுத்துதல்.

- முக்கியமான தேசிய மொழிகள் மற்றும் இணைப்பு மொழியைப் பயன்படுத்தி இனங்களுக்கிடையே சமூக ரீதியாகவும், சமய ரீதியாகவும் சிறந்த சூழலையும், அன்னியோன்னியத் தன்மையையும் ஏற்படுத்திக் கொடுத்தல்.

## 02. தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அமைப்பு.

# தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் மற்றும் அதன் பிரிவுகள்

**தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு**

தொ.பே 0112883926-28
மின்னஞ்சல் admin@lanintegmin.gov.lk
இணையத்தளம் www.lanintegmin.gov.lk
தொலைநகல் 0112883929

**சப்ரகமுவ மாகாண நிலையம்**

இரத்தினப்புரி, குருவிட்ட.

தொ.பே 045-2262777

தொலைநகல் 045 2264552

**வட மாகாண நிலையம்**

திருநகர், கிளிநொச்சி

தொ.பே 021 2283656

தொலைநகல் 021 2283656

**மொழிகள் பிரிவு**

தொ.பே 01122883713

தொலைநகல் 011 2883714

மின்னஞ்சல்- addlsecnl@lanintegmin.gov.lk

**சமூக ஒருமைப்பாடு மற்றும் இனவிவகார அலுவ பிரிவு**

தொ.பே -011 2865942

தொலைநகல் 0112883785

மின்னஞ்சல்- Hazeem.mnlsi@gmail.com

**நிர்வாகப் பிரிவு**

தொ.பே-011 2883782

தொலைநகல் 0112883784

மின்னஞ்சல் - sasad@lanintegmin.gov.lk

**திட்டமிடல் பிரிவு**

தொ.பே -011 2886796

தொலைநகல் - 011 2886797

மின்னஞ்சல் - planningmnlsi@gmail.com

**கணக்குப் பிரிவு**

தொ.பே -0112883935

தொலைநகல் - 0112883938

மின்னஞ்சல் - imprestnlsi@gmail.com

**உள்ளக கணக்காய்வு பிரிவு**

தொ.பே- 011 2501949

## தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள்

### அரசகரும மொழிகள் திணைக்களம்

தொ.பே -011 2888934

தொலைநகல்- 011 2888928

மின்னஞ்சல் - comol@sltnet.lk

### அரசகரும மொழிகள் ஆணைக்குழு

தொ.பே -011 2670829

தொலைநகல்- 011 2670830

மின்னஞ்சல் -olc@sltnet.lk

### தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

தொ.பே -011 3092909

தொலைநகல் - 011 2665200

மின்னஞ்சல்-nilet@sltnet.lk

### அரச சார்பற்ற நிறுவனங்கள் பற்றிய தேசிய செயலகம்

தொ.பே -011 2877376

தொலைநகல் -011 2884612

**தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் கீழ் உள்ள வெளிநாட்டு நிதியுதவி திட்டம்**

சமூக ஒத்திசைவு மற்றும் நிலைமாற்றத்திற்கான உள்ளூர் முன்னேடுப்புக்கள் (FLICT)

சட்ட அமுலாக்கல் நீதிக்கான அணுகு வழி மற்றும் சமூக ஒருமைப்பாட்டு வழுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் (SELAJSI)

# 03. தேசிய சகவாழ்வு¸ கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் கீழ் உள்ள பிரிவுகள் மற்றும் அவற்றின் செயலாற்றுகைகள்

## 3.1. மொழிகள் பிரிவு

**அறிமுகம்**

இலங்கையின் அரசகரும மொழிகள் கொள்கையை அமுலாக்குவது தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கலும் அரசகரும மொழிகள் கொள்கை அமுலாக்கல் செயற்பாடுகளை மேற்பார்வை மற்றும் தேவையாக கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுத்தல் என்பன மொழிகள் பிரிவினூடாக மேற்கொள்ளப்படுகிறது.

மொழிப் பிரிவு மூலம் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சிகளை திட்டமிடும் போது அடிப்படையாக கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் கீழ்வருபவை முக்கியமானவைகளாகும்

- கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவதற்கு அமைவாக சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தல்
- மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு அமைவான தேசிய கொள்கைக்கு அமைவாக அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவதற்கு அமைவாக சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தல்
- அரச உத்தியோகத்தர்கள் மொழித் தேர்ச்சி பெற்றுக் கொள்வதற்கு அமைவாக முன்வைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் குழு அறிக்கை சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தல்.

**நோக்கங்கள்**

- அரசகரும மொழிகள் கொள்கை அமுல்படுத்துவதுடன் தொடர்பிலான கொள்கைத் திட்டங்களைத் திட்டமிடல் மற்றும் தயாரித்தல்.
- அரச சேவையை இருமொழிகளுக்கு உட்படுத்துவதற்கு தேவையான பின்னணியை உருவாக்குதல்.
- அரசகரும மொழிகள் கொள்கையை அமுல்படுத்துவதற்காக பொது மக்களை வலுப்படுத்தல்.
- மொழிகள் பிரச்சாரம் மற்றும் மேம்பாடு தொடர்பில் இலங்கை மக்களிடத்தில் நேர்கணிய மனோநிலையை ஏற்படுத்தல்.

2015ஆம் ஆண்டு மொழிகள் பிரிவு நான்கு இலக்குகளின் கீழ் தனது நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தியுள்ளது. அவைகளாவன-

1. தேசிய மொழிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
2. மும்மொழி இலங்கை நிகழ்ச்சித்திட்டம்
3. இரு மொழி மக்கள் இயக்க நிகழ்ச்சித்திட்டம் மற்றும்
4. தேசிய மொழிகள் கருத்திட்டத்துடன் இணைந்து மேற்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்கள் (2015.01.01 இல் இருந்து 2015.05.31 வரை மாத்திரம்).

### 3.1.1. தேசிய மொழிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

### 01. மொழித் திட்ட வசதியாக்கல் நிகழ்ச்சித்திட்டம்

அரச நிருவாக சுற்றறிக்கை இல. 18∴2009ற்கு அமைய அனைத்து அரச நிறுவனங்களிலும் அரசகரும மொழிகள் கொள்கையை அமுல்ப்படுத்துவதற்கு உபாய திட்டமிடல் தயாரிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு தேவையான உதவிகளை வழங்குவதற்காக இந்த அமைச்சினால் அரச நிறுவனங்களில் மொழித் திட்டத்தை தயாரிப்பதற்கான மொழி வழிகாட்டல் கைநூல் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

அரசகரும மொழிகள் கொள்கையை வினைத்திறனாக அமுலாக்குவதனை தனது விடயப்பரப்பில் கொண்டுள்ள இந்த அமைச்சானது அரச நிறுவனங்களில் மொழிக்

கொள்கைகளை தயாரிப்பதற்கு வசதியளிக்கும் நோக்குடன் அரச நிறுவனங்களில் மொழித் திட்டத்திற்கு வசதியளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் கீழ் இதுவரையில் பின்வரும் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

- **மொழித் திட்டத்தை தயாரிப்பது தொடர்பில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை அடையாளம் காணல் மற்றும் பயிற்சியளித்தல்**



அமைச்சு, அமைச்சுக்கு உட்பட்ட நிறுவனங்கள் மற்றும் கள உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 54 உத்தியோகத்தர்கள் அடையாளம் காணப்பட்டதுடன் அந்த உத்தியோகத்தர்களுக்கு மொழித் திட்டம் தயாரிப்பது தொடர்பில் தொழில்நுட்ப பயிற்சி, பயிற்சியாளர்களுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் 02 ஊடாக வழங்கப்பட்டுள்ளன. அதன் முதல் நிகழ்ச்சித்திட்டம் 25 உத்தியோகத்தர்களுக்காக 2015.04.22ஆம் திகதியில் இருந்து 24ஆம் திகதி வரை இடம்பெற்றது. இரண்டாவது நிகழ்ச்சித்திட்டம் 29 கள உத்தியோகத்தர்களுக்காக 2015.09.09ஆம் திகதியில் இருந்து 11ஆம் திகதி வரை இடம்பெற்றன.



பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களுக்கு குறிப்பிட்ட கால எல்லையினுள் தாம் கடமையாற்றும் துறைக்கு உட்பட்ட விதத்தில் மொழித் திட்டங்களை தயாரித்து வழங்கும்படி ஒப்படையொன்று வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் அமைச்சு மற்றும் அமைச்சுக்கு உட்பட்ட நிறுவனங்கள், மாவட்டச் செயலகங்கள் ஆகியனவற்றில் மொழித் திட்டங்களை தயாரிப்பதற்கு மற்றும் அதனோடு தொடர்புடைய உத்தியோத்தர்களுக்கு பயிற்சியளித்தலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மொழித் திட்டம் தயாரிப்பது தொடர்பாக தொழில்நுட்ப பயிற்சியைப் பெற்ற குறித்த உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்ட அமைச்சு, மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் மொழித் திட்டத்தை தயாரிப்பது தொடர்பான வசதியளிப்பு பணிகள் தொடர்பில் தொழில்நுட்ப பங்களிப்பை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

- **அமைச்சுகளில் மொழித் திட்டங்களுக்கான வசதியளிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்தல்**




இதன் கீழ் ஐந்து அமைச்சுகளில் (நீதி அமைச்சு, பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, உள்நாட்டலுவல்கள் அமைச்சு, பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு மற்றும் சட்டம் மற்றும் சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சு) மொழித் திட்டங்களை தயாரிப்பது தொடர்பிலான வசதியளிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் 2015.10.16ஆம் திகதி பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத் துறை அமைச்சுக்கு உட்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மொழித் திட்டத்தை தயாரித்தல் தொடர்பில் விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டம் இடம்பெற்றது. மொழிகள் கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பிலான சட்ட ஏற்பாடுகள் பற்றி கலாநிதி பிரதீபா மஹாநாம ஹேவா அவர்களும் மொழிக் கொள்கை தயாரிப்பது தொடர்பில் மேலதிக செயலாளரினால் (அபிவிருத்தி) விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன

- **மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் மொழித் திட்டங்களுக்கு வசதியளிப்பு செயற்பாடுகளை ஆரம்பித்தல்**



பதுளை, காலி, கண்டி, குருநாகல், நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாட்டச் செயலகங்களிலும் கொத்மலை பிரதேச செயலகத்திலும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டு மொழித் திட்டம் தயாரித்தல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- **தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு ஒருங்கிணைப்பு.'.உதவுனர் உத்தியோகத்தர்களுக்கு மொழித் திட்டத்தை தயாரித்தல் தொடர்பில் பயிற்சிகளை வழங்குதல்.**



இதன் கீழ் அனுராதபுரம், கண்டி, குருநாகல், நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய பிரதேச செயலகங்களில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு குறித்த பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் தாங்கள் அமர்த்தப்பட்டுள்ள அலுவலகத்தில் மொழித் திட்டம் தயாரித்தல் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

## 02 அரசகரும மொழிகள் கொள்கையை அமுல்படுத்தல் தொடர்பிலான சாதனங்கள் மற்றும் கருவிகளை தயாரித்தல்

- **மொழி வழிகாட்டல் கைநூலை மீள அச்சிடல்**

அரச நிறுவனங்களில் மொழித்திட்டம் தயாரிப்பது தொடர்பில் தயாரிக்கப்பட்ட மொழி வழிகாட்டல் கை நூல் பிரதிகள் 2000 மற்றும் இறுவட்டுகள் 2000 தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த புத்தகமானது மொழித் திட்டங்களுக்கு உதவுதல் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான கற்றலுக்கான உதவு விடயமாக பயன்படுத்தப்படும்.

- **சிங்கள.'. தமிழ் எழுத்துப் புத்தகத்தை மீள அச்சிடல்**

அரச உத்தியோகத்தர்களின் மொழித் தேர்ச்சியை மேம்படுத்துவதற்கான வழிகளை அடையாளம் காணும் பொருட்டு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளுக்கு அமைய சிங்கள.'. தமிழ் எழுத்துப் புத்தகம் 20,000 அச்சிடல் இடம்பெற்றது. இந்த நூல் முன்னுரிமை கோரிக்கைகள் அடிப்படையில் அரச நிறுவனங்களில் பகிர்ந்தளிக்கப்படும். அதன் அங்குரார்ப்பன நிகழ்வு 2015.07.10ஆம் திகதி கௌரவ அமைச்சர் கரு ஜெயசூரிய அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

- **பிரதேச அடிப்படையில் இரு மொழி நிர்வாகத்திற்கு அவசியமான காணொலி அம்சங்களை தயாரித்தல்**

  அரச நிறுவனங்களில், பெரும்பாலும் இரு மொழிகளும் பயன்படுத்தத்தக்க சந்தர்ப்பங்கள் 5ஐ அடிப்படையாக கொண்டு சிங்கள மற்றும் தமிழ் உரையாடல்கள் அடங்கிய னுஏனுக்கள் 05 தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதனுடன் தொடர்பான ஆரம்பக்கட்ட பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்கால நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டில் நடாத்த எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கருவிகளை பயன்படுத்தி பொது மக்களுக்கு இரு மொழி சேவை வழங்கும் இயலுமையை மேம்படுத்து வாய்ப்பு ஏற்படும்.

- **"அபூர்வ நதி" அமைச்சின் செய்தி ஏடு தயாரிப்பு**

  "அபூர்வ நதி"யின் முதலாவது மற்றும் இரண்டாவது வெளியீடுகள் தயாரிக்கப்பட்டு அதன் 3000 பிரதிகள் பகிர்ந்தளித்தக்கப்பட்டன. அந்த வகையில் அனைத்து அமைச்சுகள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் இந்த செய்தி ஏடுகள் வழங்கப்பட்டன. மேலும் இதுவரையில் அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ள மொழிகள் சங்கங்களுக்கும் இந்த செய்தி ஏடுகள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டன.

அபூர்வ நதி செய்தி ஏட்டின் ஊடாக சமூகத்தின் பல்வேறு துறைகளில் இரு மொழி தேர்ச்சி ஊடாக தேசிய சமாதானத்தை ஏற்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றிய கருத்தாடலை ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் புத்த தர்மமும் சமூக ஒருமைப்பாட்டும், பல மொழிகள் இருப்பதன் முக்கியத்தும், பொருள்பொதிந்த கலைத்துவமான பாடல்கள் ஊடாக இனங்களுக்கிடையில் சௌஜன்ய உணர்தூண்டலை ஏற்படுத்தல் என பல கட்டுரைகள் பலவற்றை வெளியிட முடிந்துள்ளது.

**03 அரசகரும மொழிகள் கொள்கை அமுலாக்கல் பற்றிய கலந்துரையாடல்சார் செயலமர்வை நடாத்தல்**



அரசகரும மொழிகள் கொள்கையை அமுலாக்கல் பற்றி அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் கொள்கையை வினைத்திறனாக அமுலாக்குவதற்கான அத்தியாவசிய காரணியாகும். இந்த நோக்கத்தை அடிப்படையாக கொண்டு மொழிகள் பிரிவின் அரசகரும மொழிகள் கொள்கையை அமுலாக்குவதற்கு அரசின் குறித்த பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவம் செய்கின்ற நிறுவனங்களின் தலைவர்களுக்கு விழிப்பூட்டுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த வகையில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் உட்பட பாடசாலை மாணவர்களுக்கும் அரசகரும மொழிகள் கொள்கையை அமுல்படுத்தல் பற்றிய சட்ட ஏற்பாடுகள் பற்றிய விழிபூட்டல்



இதன் கீழ் இரத்தினபுரி, காலி, நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய பொலிஸ் எல்லைப் பிரதேசத்திற்கு உட்பட்ட 78 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உட்பட 1000 பேர் அளவில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றினர். மேலும், வடக்கு மாகாண சபை, சபரகமுவ மாகாண சபை, தென் மாகாண சபை மற்றும் வடமேல் மாகாண சபை ஆகியவற்றுக்கு உட்பட்ட அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் 600 பேர் அளவில் அரசகரும மொழிகள் கொள்கை அமுல்படுத்தல் தொடர்பில் விழிப்பூட்டலும் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இடம்பெற்றது. பாடசாலை மாணவர்கள் அரசகரும மொழிகள் கொள்கை அமுலாக்கல் தொடர்பில் விழிப்பூட்டுவதன் கீழ் கண்டி, மாத்தறை, அம்பாறை, கம்பஹா, கொழும்பு, களுத்துறை, மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் பாடசாலை மாணவர்கள் 2,880 பேர் அளவில் விழிப்பூட்டுவதற்கு மொழிகள் பிரிவுக்கு இயலுமாகியுள்ளது.

இந் நிகழ்ச்சித்திட்டங்களின் மாதிரியினூடாக அரசகரும மொழிகள் கொள்கை மற்றும் சட்ட ஏற்பாடுகள், சமூக ஒருமைப்பாட்டு கொள்கைச் சட்டகம், அரசகரும மொழிகள் கொள்கையை அமுலாக்குவது தொடர்பில் அமைச்சு மற்றும் அதற்குட்பட்ட நிறுவனங்கள் பணிகள் தொடர்பில் இலக்கு குழுக்களுக்கான விழிப்பூட்டல் இடம்பெற்றது. அதற்காக நிபுணர்களின் விரிவுரை, கணினிசார் முன்வைப்பு மற்றும் குழு செயற்பாடுகள் பயன்படுத்தப்பட்டன. பாடசாலை மாணவர்களுக்கு விழிப்பூட்டுவதற்கு நடத்தப்பட்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் பயிற்சியாளர்களாக அமைச்சின் உத்தியோகத்தர்களின் பங்களிப்பு பெற்றுக் கொள்வதற்கு முடிந்தது. அடையாளம் காணப்பட்ட நிறுவனங்களில் மொழித் திட்டத்தை தயாரித்தல் இந்த விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டத் தொடரின் ஒரு நோக்கமாகையால் அதற்காக உத்தியோகத்தர்களுக்கு தேவையான தொழில்நுட்ப விழிப்பூட்டல் வழங்குதல் இடம்பெற்றது.

### 04 மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செலகங்களில் இருமொழி சேவை உதவு நிலையங்களை தாபித்தல்

அரச நிறுவனங்களில் மக்கள் தாங்கள் விரும்பிய மொழிகளில் சேவையை பெற்று கொள்ளும் பணியை மேலும் இலகுபடுத்துவதற்காக 2012ஆம் ஆண்டில் இருந்து இரு மொழி உதவு நிலையங்கள் தாபிக்கப்பட்டு வருகின்றன. அதன் கீழ் இது வரையில் இரு மொழி பிரதேச செயலகங்களாக பிரகடனப்படுத்தியுள்ள 72 பிரதேச செயலகங்களில் 72 உதவு நிலையங்கள் அமைச்சினால் தாபிக்கப்பட்டுள்ளன. பொது மக்களுக்கு மிகவும் வினைத்திறனான சேவையை வழங்கும் பொருட்டு பிரதேச செயலகங்களுக்கு இந்த அமைச்சுக்கு நியமனம் பெற்ற கள உத்தியோகத்தர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். 2013ஆம் ஆண்டில் இந்த இரு மொழி உதவு நிலையத்தின் இன்னொரு வளர்ச்சியாக 19 மாவட்டச் செயலகங்களில் உதவு நிலையங்கள் தாபித்தல் தற்போது வெற்றிகரமாக நிறைவு பெற்றுள்ளது.




2014ஆம் ஆண்டில் இரு மொழி பிரதேச செயலகங்கள் 06இல் மற்றும் மாவட்டச் செயலகங்களில் 08இல் உதவு நிலையங்கள் தாபித்தல் இடம்பெற்றதுடன் 2015ஆம் ஆண்டில் கொழும்பு, திருகோணமலை, புத்தளம் ஆகிய மாவட்டங்களிலும் லாவுகல, பதியதாலாவ, குண்டசாலை, கேகாலை மற்றும் மொணராகல ஆகிய பிரதேச செயலளங்களில் உதவு நிலையங்களை தாபித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 05. புத்தாக்க மாதிரிகள் 14இல் அரசகரும மொழிகள் கொள்கை அமுலாக்கலை வலுப்படுத்தல்

அரசகரும மொழிகள் கொள்கைளை அமுல்படுத்துவது தொடர்பில் பிரதானமாக கருத்திற் கொள்ள வேண்டிய பிரிவுகள் 04 தொடர்கல் கவனத்திற் கொள்ளப்பட்டன. அவையாவன்

- அரசகரும மொழிகள் கொள்கை அமுல்படுத்தப்படுத்தலை வெளிப்படுத்தல்
- அரசகரும மொழிகள் கொள்கை அமுல்படுத்துவதற்கு நிருவாக மற்றும் ஆவண நடவடிக்கைகளை தயார் செய்தல்.
- அரசகரும மொழிகள் கொள்கையை அமுலாக்குவதற்கான சேவைகளை வழங்குதல்
- அரசகரும மொழிகள் கொள்கையை அமுல்படுத்தல் தொடர்பிலான நிறுவன அர்ப்பணிப்பு.




அந்த வகையில் இந்த அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய மொழிகள் கருத்திட்டமானது கனேடிய அரசின் நிதியுதவியுடன் அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட இலங்கையில் பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவம் செய்யும் அரச நிறுவனங்கள் 14இல் அரச கரும மொழிகள் கொள்கை அமுல்படுத்த குறித்த புத்தாக மாதிரிகளாக கட்டியெழுப்பும் பணி வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் மொழிகள் கருத்திட்டத்தின் கீழ் ஆசிய பவுண்டேசன் நிறுவனத்தினால் குறித்த பிரமாணங்கள் 04ற்கு அமைய தெரிவு செய்யப்பட்ட 14 புத்தாக்க மாதிரிகளாக கட்டியெழுப்பப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்களுக்கிடையில் உள்ளூராட்சி சபைகள் 07, பிரதேச செயலகம் 01, பொலிஸ் நிலையங்கள் 03 மற்றும் வைத்தியசாலைகள் 03 புத்தாக்க மாதிரிகளாக கட்டியெழுப்புதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.




இந்த அமைச்சினால் 2015ஆம் ஆண்டு புத்தாக்க மாதிரிகளாக அடையாளம் காணப்பட்ட அரச நிறுவனங்கள் 14இல் அரசகரும மொழிகள் கொள்கை அமுல்படுத்தும் மாதிரி நிறுவனங்களாக தொடர்ந்தும் வலுப்படுத்தல் என மேற்கொள்ளபட்டது. இதனூடாக இந்த விடயம் தொடர்பில் செயற்படும் வேறு அரச நிறுவனங்களுக்கும் முன்மாதிரியை வழங்கும் வகையில் இந்த நிறுவனத்தை நடத்திச் செல்வது அடிப்படை நோக்கமாக கொள்ளப்பட்டுள்ளது. அதன் கீழ் குறித்த நிறுவனங்களில் அரசகரும மொழிகள் கொள்கையை அமுல்படுத்த குறித்த கண்காணிக்கும் பட்டியலை மீண்டும் அவதானிப்பதன் மூலம் குறைபாடுகளை அடையாளம் காணல் இடம்பெறுகிறது. அந்த வகையில் அரசகரும மொழிகள் கொள்கையை

அமுலாக்குவது தொடர்பில் பேண்தகு அபிவிருத்தி திட்டத்திற்காக மொழிகள் பிரிவு ஒதுக்கீடுகளை வழங்கியது.

இதன் கீழ் கந்தளாய் பிரதேச சபை, பண்டாரவளை பிரதேச செயலகம் மற்றும் நுவரெலியா மாநகர சபை ஊடாக எமக்கு வழங்கப்பட்ட ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்திட்டங்களுக்கு அமைச்சினால் வழங்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு வழங்குதல் இடம்பெற்றது. இந்த பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு ரூபா. 1,000,000.00 என்பதுடன் வருட இறுதியில் மொத்தச் செலவாக ரூபா. 1,022,525.00 ஆகும். அந்த வகையில் கருத்திட்டம் அறிக்கைகளை அனுப்பிய காலி மஹமோதர போதனா வைத்தியசாலை, நுவரெலியா பொலிஸ் நிலையம் மற்றும் திருகோணமலை பிரதான வைத்தியசாலை ஆகிய நிறுவனங்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்குதல் அடுத்த வருடம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.




### 06 மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் மும்மொழி பெயர் பலகை தாபித்தல்

அரச சேவையில் இரு மொழியாக்கத்துக்கு தேவையான சூழலை ஏற்படுத்த அரசகரும மொழிகள் கொள்கை அமுலாக்கத்தை வெளிப்படுத்தலின் பொருட்டு அரச நிறுவனங்களில் மும்மொழிகளில் பெயர் பலகை தாபிப்பதற்கு ஒதுக்கீடுகளை வழங்குதல் மொழிகள் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட குறிப்பிட்டுச் சொல்லத்தக்க மற்றொரு அம்சமாகும். அந்த வகையில் தற்போது இரு மொழி பிரதேச செயலகங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள பிரதேச செயலகங்களுக்கு முன்னுரிமை வழங்க முடிவெடுக்கப்பட்டது. அந்த வகையில் 22 பிரதேச செயலகங்களுக்கு ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

### 07 வெகுஜன ஊடகம் மூலமாக தேசிய மொழிகளை மேம்படுத்தல்

வானொலி நேயர்களுக்கு அமைச்சின் பணிகள் பற்றியும் மொழிக் கொள்கை மற்றும் சமூக ஒருமைப்பாடுக் கொள்கை பற்றியும் விழிப்பூட்டலை அதிகரித்தல் இந்த நிகழ்ச்சியின் அடிப்படை நோக்கமாகும். அந்த வகையில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் ஒலிபரப்பப்படுகின்ற வானொலி நிகழ்ச்சிகள் இரண்டுக்கு அமைச்சின் ஒத்துழைப்பு வழங்கப்படுகிறது. பாலம.். பாலம் ஆகிய வானொலி நிகழ்ச்சிகள் 2015 ஜனவரி மாதத்தில் இருந்து செப்டம்பர் மாதம் வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக சேவை மற்றும் தென்றல் எப்.எம் ஆகியவற்றினூடாக ஒலிபரப்பப்படுகிறது. (ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் மு.ப. 10.30 தொடக்கம் 11.00 வரை ஒலிபரப்பாகும்.) இதில் 38 நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு புதன்கிழமைகளில் அமைச்சில் ஒலிபரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒக்டோபர் மாதத்தில் இருந்து திசம்பர் மாதம் வரை சுபாரதி.். விடியும் வேளை நிகழ்ச்சிகள் 18ற்கு அமைச்சு பங்களித்துள்ளது. நிகழ்ச்சி பற்றி தயாரிக்கப்பட்ட முன்னோட்டம் மூலம் நிகழ்ச்சி பற்றி நேயர்களுக்கு விழிப்பூட்டப்பட்டுள்ளது.

### 08 சமூக ஒருமைப்பாட்டு வாரத்திற்கான விசேட கருத்திட்டங்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்குதல்

இந்த அமைச்சினால் வருடாந்தம் அங்குரார்ப்பணம் செய்யப்படும் சமூக ஒருமைப்பாட்டு வாரத்திற்கு சமூக ஒருமைப்பாட்டுப் பிரிவினால் பல்வேறு கருத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டன. அக் கருத்திட்டங்களில் இருந்து 05ற்கு மொழிகள் பிரிவு நிதி ஒதுக்கீட்டை

வழங்கியது. அவ்வாறு வழங்கப்பட்ட கருத்திட்டங்களில் கீழ் வரும் கருத்திட்டங்கள் விசேடமானவைகளாகும்.

- மொணராகலயில் உள்ள குறைந்த வசதிகளை கொண்ட கலவன் பாடசாலைக்கு உட்கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்ய ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.
- நீர்கொழும்பில் உள்ள வீதி பிள்ளைகளின் பாடசாலைக்கு கற்றலுக்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்
- மஹரகம தேசிய புற்றுநோய் நிறுவனத்தினால் தேசிய மொழிகள் கொள்கையை அமுலாக்கத்தை வெளிப்படுத்த பெயர்ப் பலகைகளை மும்மொழிகளிலும் தயாரிப்பதற்கு ஒதுக்கீடுகளை வழங்குதல்.
- ஹப்புத்தலை தோட்ட மக்கள் வசிக்கும் 02 குடியிருப்புகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- புத்தளம் உசேனியாபுரவில் உள்ள முன்பள்ளியொன்றை அபிவிருத்தி செய்தல்.

### 3.1.2. இரு மொழிகள் மக்கள் இயக்கத்தின் நிகழ்ச்சிகள்

#### 01. மொழிச் சங்கங்களை தாபித்தல்



இரு மொழிகளால் இதயபூர்வமான இணைந்த சமத்துவமிக்க ஒரே இலங்கை தேசத்தை கட்டியெழுப்புதல் என்ற நோக்கத்தை கொண்டு அரசகரும மொழிகள் கொள்கையை அமுல்படுத்துவதன் பெறுமதியை மக்களிடையே கொண்டு செல்வதற்கான நிகழ்ச்சித்திட்டமாக மொழிச் சங்கங்கள் தேசிய இயக்கத்தை குறிப்பிட முடியும்.

இந்த நிகழ்ச்சித்திட்டம் 2012ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் இது வரையில் 2,428 மொழிச் சங்கங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. 2015ஆம் ஆண்டு பதிவு செய்த மொழிச் சங்கங்களின் எண்ணிக்கை 279ஆகும். இதற்கு சமாந்திரமாக மக்களிடத்தில் சிங்களம், தமிழ் மொழிகளை கற்கும் திறனை விருத்தி செய்வதற்கும் இரு மொழிகளை மேம்படுத்தும் நோக்குடன் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் 206 வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனவே பொது மக்கள் தங்களின் பிரதேசங்களில் அரசகரும மொழிகள் கொள்கையை அமுல்படுத்தும் பெறுமதி தொடர்பாக பெற்றுக் கொள்ளும் புரிதல் சமூக சகவாழ்வை ஏற்படுத்த சிறந்த பங்களிப்பை வழங்க முடியும்.

#### 02. தேசிய மொழிகளின் மேம்பாடு மற்றும் சமூக சகவாழ்வை ஏற்படுத்துவதற்காக மொழிகள் சங்கங்களினால் முன்வைக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்குதல்.



மொழிச் சங்கங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் மற்றொரு பணியாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் தேசிய சமாதானம், ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்துதல் என்ற குறிக்கோளுடன் பல்வேறு கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்த கருத்திட்டங்களில் சிங்கள, தமிழ் தேசிய விழாக்களை ஏற்பாடு செய்தல், இளைஞர் பரிமாற்றல் நிகழ்ச்சிகளை நடாத்தல், மொழி அறிவின் மூலம் சுயதொழில்களுக்கு வழிகாட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல், சிங்கள, தமிழ்

பிணைப்பை மேம்படுத்துவதற்கான முகாம், மொழி முகாம் நடாத்தல் ஆகியவற்றை குறிப்பிடலாம். 2015ஆம் ஆண்டில் இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் தாபிக்கப்பட்ட மொழிச் சங்கங்களில் 87 கருத்திட்டங்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்க மொழிப் பிரிவுக்கு முடிந்துள்ளது.

**03. அடையாளம் காணப்பட்ட பிரதேச செயலகங்கள் 04 நான்கினை புத்தாக மாதிரிகளாக கட்டியெழுப்புதல்**

அரசகரும மொழிகள் கொள்கையை அமுலாக்குவது தொடர்பில் புத்தாக்க மாதிரிகளை கட்டியெழுப்புதன் கீழ் அரச அலுவலகங்கள் 04இல் புத்தாக்க மாதிரிகளாக நிலைமாற்றம் செய்யும் பணிகள் இந்த வருடத்தில் இருந்து மொழிகள் பிரிவினூடாக ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமாகும். இதன் கீழ் மாகாண நிலையங்களின் ஊடாக மேற்கொள்ளக்கூடிய பணிகளாக குருவிட்ட மற்றும் இரத்தினபுரி பிரதேச செயலகங்களிலும் கரைச்சி மற்றும் பூனகரி பிரதேச செயலகங்களிலும் மாதிரிகளாக கட்டியெழுப்ப தேவையான வசதியளிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் கீழ் குறித்த பிரதேச செயலகங்களில் பிரதான அரசகரும மொழிகள் அமுலாக்கல் உத்தியோகத்தர், அரசகரும மொழிகள் உத்தியோகத்தர் உட்பட ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கு அரசகரும மொழிகள் கொள்கை தொடர்பாக விழிப்பூட்டி அதன் பின்னர் தங்களின் நிறுவனங்கள் மொழித் திட்டம் தயாரித்து அரசகரும மொழிகள் கொள்கையை வினைத்திறனாக அமுல்படுத்துவதற்கு தேவையான ஏற்புடைய வழிகாட்டல்கள் மொழிகள் பிரிவினால் வழங்கப்பட்டன. இவ்வாறு இடம்பெற்ற ஆரம்ப நிகழ்ச்சித்திட்டத்தின் முடிவில் மொழித் திட்டங்கள் தயாரிப்பதற்கு நிறுவனங்களுக்கான ஒப்படை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் குறித்த நிறுவனங்களில் மொழித் திட்டம் தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பில் தேவைப்படும் தொழில்நுட்ப உதவியை, மொழிகள் திட்டங்களை தயாரித்தல் தொடர்பில் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களினால் நடாத்தப்படும்.

### <u>3.1.3. மும்மொழி இலங்கை நிகழ்ச்சித்திட்டம்</u>

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு வகுப்புளை நடாத்த ஒதுக்கிடுகளை வழங்குதல் இடம்பெற்றது. அந்த வகையில் ரூபா. 16,627,000.00 நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

### <u>3.1.4. தேசிய மொழிகள் கருத்திட்டத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்</u>

**01. அரசகரும மொழிகள் கொள்கையை அமுலாக்குவதற்கு குறித்த திட்டமிடல், தலைமைத்துவம் மற்றும் நிருவாகத்தை வலுப்படுத்துதல் தொடர்பில் தேசிய மொழிகள் பிரிவுக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.**

- **பால்நிலை பற்றி மைய உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்கும் செயலமர்வு**

  2014ஆம் ஆண்டு இடம்பெற்ற பால்நிலை பற்றிய உணர்நிலை நிகழ்ச்சித் தொடரை நடாத்தியதன் பின்னர் தெரிவு செய்யப்பட்ட மைய உத்தியோகத்தர்கள் 26 பேருக்கு பால்நிலை பற்றி குறித்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தனர். செயலமர்விற்கு அமைச்சு மற்றும் அதற்கு உட்பட நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் சிங்கள மற்றும் தமிழ் மொழிமூலத்தை பிரதிநிதித்துவம் செய்து பங்குபற்றினர். செயலமர்வின் முடிவில் தனது நிறுவனத்தில் பால்நிலை உணர்நிலை

நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கான அண்ணளவான செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல் இடம்பெற்றது.

- **இரு மொழி உதவி நிலையங்களை தாபித்தல்**

மொரவெவ மற்றும் வலப்பனை பிரதேச செயலகங்களில் தாபிக்கப்பட்ட இரு மொழி உதவு நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் இடம்பெற்றது. அதன் கீழ் குறித்த உதவு நிலையங்கள் இரண்டிற்கும் தேவையான கணினி வசதிகள் மற்றும் ஏனைய உபகணரங்கள் வழங்கப்பட்டன. அமைச்சினுடாக குறித்த நிறுவனங்களுக்கு அமர்த்தப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களினால் தேவையான இரு மொழி வசதியளிப்பு இடம்பெறுகிறது.

**02. அரசகரும மொழிகள் கொள்கையை அமுலாக்க தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்**

- **அரசகரும மொழிகள் கொள்கையை அமுலாக்க மற்றும் சட்ட ஏற்பாடுகள் பற்றிய கைநூலை தயாரித்தல்.**
  - அரச நிறுவனங்களில் மொழித் திட்டத்தை தயாரிப்பது தொடர்பான மொழி வழிகாட்டல் கைநூலுடன் ஆராய்வதற்கு அரசகரும மொழிகள் கொள்கை மற்றும் அது தொடர்பான சட்டங்கள் அடங்கிய கைநூல் தயாரிக்கப்பட்டன. அரசகரும மொழிகள் கொள்கை அமுலாக்கம் தொடர்பில் இதுவரை வெளியிடப்பட்டுள்ள அனைத்து சுற்றிக்கைகள் மற்றும் சட்டங்கள் பற்றிய தகவல்கள் இந் நூலினூடாக அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகிறது. இது வரையில் 1500 நூல்கள் மற்றும் மொழி வழிகாட்டல் கைநூல்கள் உள்ளடங்கிய இறுவட்டுக்கள் 3000 தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த கருவிகள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்படும் அரசகரும மொழிகள் கொள்கை அமுலாக்கம் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்களின் போது பயன்படுத்தப்படுகிறது.

  - **மொழிகள் திட்டத்தை தயாரித்தல் பற்றிய தொழில்நுட்ப பயிற்சி**

அரச நிறுவனங்களில் மொழித் திட்டங்களை தயாரித்தல் தொடர்பில் தொழில்நுட்ப பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தொடர்பிலான தேவைகளை அறிந்து கொள்ளும் செயலமர்வு (நேநன யுளளநளஅநவெ ஷூழசமளாழி) ஆசிய பவுன்டேசன் நிறுவனத்தின் பங்களிப்புடன் இடம்பெற்றது. அதன் பின்னர் அரச நிறுவனங்களில் அரசகரும மொழிகள் கொள்கையை தயாரிப்பது தொடர்பில் கீழ் வரும் கைநூல் தயாரிக்கப்பட்டுள்ளன.

- அமைச்சு, திணைக்களம் ஆகிய மட்டங்களில் மொழிகள் திட்டத்தை தயாரித்தல் தொடர்பில் மொழிகள் வழிகாட்டல் கைநூல்
- மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றில் மொழிகள் திட்டம் தயாரிப்பது தொடர்பில் இலகுவான மொழியில் வழிகாட்டல் கைநூல்
- அமைச்சின் மைய உத்தியோகத்தர்களுக்கு மொழிகள் திட்டத்தை தயாரிப்பது தொடர்பில் வலுப்படுத்துவதற்கு இலகு வழிகாட்டல் கைநூல்
- மொழிகள் திட்டம் பற்றி மொழி அழைப்பு நிலையத்திற்கு கிடைக்கும் அழைப்புகளை முகாமை செய்தலுக்காக குறித்த பிரச்சினை - தீர்வு கைநூல் தயாரித்தல்

இந்த கைநூல்களை பயன்படுத்தி மொழிகள் திட்டத்தை தயாரித்தல் தொடர்பில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளித்தல் தேசிய மொழிகள் கருத்திட்டத்தின் நிதி பங்களிப்புடன் மற்றும் ஆசிய பவுண்டேசன் நிறுவனத்தின் தொழில்நுட்ப பங்களிப்பின் கீழ் இடம்பெற்றது. அந்த வகையில் அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் 54 பேருக்கு மொழிகள் திட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாக வலுப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. அந்த

உத்தியோகத்தர்கள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்படும் மொழித் திட்டத் தயாரிப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்குவர்.

## 03. மொழிகள் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டத்திற்கான பங்களிப்பை வழங்குதல்.

- **அமைச்சின் மொழிகள் வழிகாட்டல் திட்டத்தை தயாரித்தல்**

அரச நிறுவனங்களில் அரசகரும மொழிகள் கொள்கையை வினைத்திறனாகவும் வெற்றிகரமாகவும் அமுலாக்க 5 வருட மூலோபய திட்டமிடலாக மொழிகள் வழிகாட்டல் திட்டத்தை குறிப்பிடலாம். இதனை அடி மட்டத்தில் இருந்து தேசிய மட்டம் வரை அமைச்சுகளில் நிலைபெறும் ஆவணம் என்பதுடன் அதனூடாக ஒவ்வொரு அரச நிறுவனமும் மொழிகள் கொள்கையை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் அமுலாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் மூலோபாய மற்றும் கொள்கை ரீதியான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.
இந்த பணிக்காக அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருக்கின்ற மொழிகள் வழிகாட்டல் பற்றிய அடிப்படை ஆவணமானது (ஆயளவநச னழஉரஅநவெ) ஆலோசகர் திரு. அசோக குணவர்தன அவர்களின் தலைமையில் தயாரிக்கப்பட்டதாகும்.

ஏனைய அமைச்சுகளின் மொழிகள் வழிகாட்டல் திட்டத்தை தயாரிக்கையில் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் அடங்கிய இலகுப்படுத்தப்பட்ட மொழிகள் வழிகாட்டல் திட்டம் ஆவணம் தேசிய மொழிகள் கருத்திட்டத்தின் தொழில்நுட்ப பங்களிப்புடன் இடம்பெறும் மற்றொரு பணியாகும்.

குறித்த ஆவணங்கள் அனைத்தும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பெறத்தக்கதாக இருப்பதுடன் புதிய அமைச்சின் விடயப்பரப்பிற்கு அமைய உள்ளடங்க வேண்டிய விடயங்களும் உள்ளடக்கப்பட்டு மீள தயாரிக்கப்பட வேண்டியுள்ளது.

- **தேசிய மொழிகள் கருத்திட்டத்தின் நிறைவு நிகழ்ச்சி**

இது 2015.04.24ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்றது. இதன் போது பிரதம அதிதிகளாக அமைச்சர் கௌரவ. கரு ஜெயசூரிய மற்றும் பிரதி அமைச்சி சீ.பீ. ரத்நாயக்க ஆகிய அமைச்சர்கள் பங்குபற்றினர்.
இதன் போது தேசிய மொழிகள் கருத்திட்டத்தின் ஆரம்பத்தில் இருந்து இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் வெற்றி தொடர்பில் கலந்துரையாடல்கள் மற்றும் முன்வைத்தல் இடம்பெற்றது. தேசிய மொழிகள் கருத்திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டு எதிர்காலத்திலும் முன்னெடுக்கப்பட வேண்டிய கருத்திட்டங்கள் பற்றி இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டன.
மேலும் அமைச்சினால் மேற்கொள்ளப்படு எதிர்கால நடவடிக்கைகளுக்கு தேவைப்படுகின்ற வலைப்பின்னல் நடவடிக்கைகளும் இடையில் இடம்பெற்றன.

## 04. பிரதேச மட்டத்தில் புத்தாக்க மாதிரிகளை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்கள்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் -

- அரச நிறுவனங்களில் மொழித் திட்டத்தை தயாரிப்பது தொடர்பில் தொழில்நுட்ப பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பில் தேவைகளை அடையாளம் (நேநன யளளநளளஅநவெ றுழசமளாழி) காணும் 02 நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல்,
- மொழித் திட்டங்களை தயாரிப்பது தொடர்பில் அழைப்பு நிலையத்திற்கு கிடைக்கும் அழைப்புகளை முகாமைத்துவம் செய்வதற்கு பிரச்சினை – தீர்வு கைநூல் தயாரித்தல்,
- அமைச்சு, திணைக்களம் ஆகிய மட்டங்களில் மொழித் திட்டங்களை தயாரிப்பது தொடர்பில் மொழிகள் வழிகாட்டல் கைநூல் தயாரித்தல்,

- புத்தாக்க மாதிரி எண்ணக்கருவை ஏனைய அரச நிறுவனங்களுக்கும் விரிவடைய செய்ய, புத்தாக்க மாதிரி விரிவுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் அமைச்சினால் அறிமுகப்படுத்தல்,

என்பன இதன் போது இடம்பெற்றன.


அந்த வகையில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்கள் 04 மற்றும் பிரதேச சபைகள் 02 ஆகியவற்றை புத்தாக்க மாதிரிகளாக கட்யெழுப்புதல் இந்த அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டன.

**05. மாவட்ட நிலையங்களை வலுப்படுத்தல்**

- சபரகமுவ மாகாண நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சபரகமுவ மாகாண நிலையத்துடன் இணைந்து மொழிச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு தேசிய மொழிகள் கருத்திட்டம் தொழில்நுட்ப பங்களிப்பை வழங்கியுள்ளன.
- மாகாண நிலையங்களில் மிகச் சிறந்த முகாமைத்துத்தை கொண்டுச் செல்வது தொடர்பில் தயாரிக்கப்பட்ட மாகாண நிலையங்கள் தொடர்பில் முகாமைத்துவ திட்டமிடல் வரைவு இந்த அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது

**செயற்திட்டத்தின் படியான செயலாற்றுகை**

**தேசிய மொழிகள் பிரிவுக்கான நிதி முன்னேற்றம்**




| தொ /இல | விபரம் | உத்தேசிக்கப்பட்ட தொகை (ரூபா) | உண்மைச் செலவு (ரூபா) | வீதம் மூ |
|---|---|---|---|---|
| 01 | தேசிய மொழிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 40,000,000.00 | 25,538,219.46 | 63.85 |
| 02 | இரு மொழிகள் மக்கள் இயக்கத்தின் நிகழ்ச்சிகள் | 21,500,000.00 | 10,113,850.88 | 47.04 |
| 03 | மும்மொழி இலங்கை நிகழ்ச்சித்திட்டம் | 25,000,000.00 | 16,627,000.00 | 66.51 |
| | **மொத்தம்** | **86,500,000.00** | **52,279,070.34** | **60.44** |

## 3.2. சமூக ஒருமைப்பாடு மற்றும் இன அலுவல்கள் பிரிவு

**அறிமுகம்**

ஒரு நாட்டிலே வாழுகின்ற அனைவரும் அந்நாட்டின் பிரசைகள் எனக்கொண்டு அனைவரும் வாழ்வதற்கான சிறந்த சமூகமொன்றை உருவாக்குவதானது அந்நாட்டின் அபிவிருத்திக்கு பெரிதும் உதவும். அப்பணியினை நிறைவேற்றுவதற்கு சீரான பாதையொன்றினை தயாரித்தல் வேண்டும். அதாவது தெளிவான கொள்கை ஒன்றினுள் செயலாற்றுதல் வேண்டும். சமூக ஒருமைப்பாடு தொடர்பாக நாட்டிலே கொள்கையொன்று இருக்கவில்லை. எனவே அதனைத் தயாரிப்பதற்கு இவ்வமைச்சு நடவடிக்கை மேற்கொண்டது. இக்கொள்கையின் நோக்கங்களானது, தான் சமூகத்துக்கு உரித்தாவர் என்ற மனநிலையை மேம்படுத்துதல், சமூக ஒருமைப்பாட்டினை மேம்படுத்த அனைத்து குடிமகனும் சம பங்குதாரர் எனும் கடமைப்பாட்டினை ஏற்படுத்துதல். ஒழுக்கம், கல்வி, மற்றும் வலுவூட்டல் எனும் தூண்களால் கட்டப்பட்ட சிறந்த விழிப்புணர்வும் ஒருமைப்பாடும் கொண்ட அனைவரையும் உருவாக்கப்பட்ட சமூகத்தினை உருவாக்குதல். அதன் போது சமூக ஒருமைப்பாட்டு செயற்பாட்டிற்கு வசதியளிக்கும் இடை ஊடகங்களாக மொழி தொடர்புகள் மற்றும் சமூக பொறுப்புக்களில் ஈடுபட்டுள்ள பொது ஊடகமொன்றின் முக்கியத்துவம் என்பன இனங்காணப்பட்டுள்ளன.

### 3.2.1 சமூக ஒருமைப்பாட்டு வாரம்

ஒவ்வொரு வருடமும் சமூக ஒருமைப்பாட்டு வாரத்தினை நடாத்துவதற்காக அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் அரசாங்கத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக சமூக ஒருமைப்பாட்டு வாரத்தினை நடாத்தமுடியவில்லை. இருப்பினும் அதற்குச் சமாந்தரமாக சமூக நலன்புரி, கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் நாடாளவிய ரீதியில் நடாத்தப்பட்டது.

இனம், சாதி, வகுப்பு, மத நம்பிக்கை, கலாசார பின்னணி, மொழி, பால்நிலை என்பவற்றினால் வேறுபட்ட இனக்குழுக்கள் சமுதாயத்தில் வாழ்கின்றனர். இந்த அனைத்துக் குழுக்கள் மற்றும் இனப்பிரிவுகள் ஒன்றோடு ஒன்றிணைந்து அவர்களது ஊழியப் பங்களிப்பினூடாக வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதன் முடிவுகள் சமுதாயத்தில் வாழ்கின்ற அனைவரையும் சென்றடையும் குறிக்கோளுடன் இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படும். அதன்கீழ் பிரதேச மட்டத்தில் சமுதாய மக்களின் பங்களிப்புடனான நிகழ்ச்சித்திட்டங்கள் சமூக ஒருமைப்பாட்டு வாரத்தின் அடிப்படை நிகழ்ச்சித்திட்டங்களில் ஒன்றாகும். சமுதாயத்தின் ஊழியப் பங்களிப்புடன் முன்பள்ளி, சிறுவர் பூங்கா, சுகாதார வசதிகள், முதியோர் இல்லம், பராமரிப்பு நிலையம், சனசமூக நிலையத்தினை திருத்தியமைத்தல், குடிநீர் வசதியை வழங்குதல், பாலம், வீதி, பாடசாலை கட்டிடத் திருத்தம் போன்ற அத்தியாவசியமான அடிப்படை வசதி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. 2015ம் வருடத்தில் ஒரு மாவட்டத்தில் இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் என்ற வீதம் நிகழ்ச்சித்திட்டங்கள் 41 மேற்கொள்ளப்பட்டுள்ளது.



சனசமூக நிலையம் திருத்தம் செய்வதற்கு முன்னரான நிலை



சனசமூக நிலையம் திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர்

சமூக ஒருமைப்பாட்டு ஏழு மூலகங்களில் ஒன்றான கல்விக்கான அணுகுவழியைப் பெற்றுக்கொள்வதன் நிமித்தம் பாடசாலை மாணவர்களுக்கான வலுவூட்டும் நோக்கத்தினை

அடிப்படையாகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. அத்துடன் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை நிகழ்ச்சித் திட்டமானது சமூக ஒருமைப்பாட்டு வாரத்தின் மற்றுமொரு பிரதான நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றாகும். இதனூடாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களின் மாதிரி வினா விடை பற்றி கலந்துரையாடுவதற்கும் மற்றும் பதில் எழுதும் முன்னாயத்தப் பயிற்சி ஒன்றினை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்ச்சித் திட்டமானது ஒரு மாவட்டத்திற்கு இரண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் வீதம் அமுல்படுத்தப்பட்டது. 2015 ஆம் ஆண்டிலே இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் 79 அமுல்படுத்தப்பட்டன. சிங்கள மொழியில் 38 நிகழ்ச்சித்திட்டங்களும் தமிழ் மொழியில் 41 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. 2015 ஆம் ஆண்டில் 11862 சிங்கள மொழி மாணவர்களும் 11793 தமிழ் மொழி மாணவர்களும் இதன் ஊடாக நன்மையடைந்துள்ளனர்.





சமூக ஒருமைப்பாட்டு வாரத்திற்குச் சமாந்தரமாக மொழி சங்கங்களின் பங்களிப்புடன் சமூக ஒருமைப்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் 45, 2015 ஆம் ஆண்டிலே அமுல்படுத்தப்பட்டன. அதனூடாக இனங்களுக்கிடையே நட்புறவு, மொழி அறிவு, திறமை மற்றும் மனப்பான்மை விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் உட்பட மொனராகலை மற்றும் புத்தளை பிரதேச செயலக அலுவலகங்களில் அறிவித்தல் பலகைகள் மும்மொழிகளிலும் தயாரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக கல்வி, பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வினையும் நம்பிக்கையையும் கட்டியெழுப்புதல், சமூக ஒருமைப்பாடு தொடர்பாக அறிவூட்டல் உள்ளிட்ட பிரிவுகளின் ஊடாக சமூகத்திலிருந்துது ஓரங்கட்டப்பட்ட இனப்பிரிவினருக்கு வலுவூட்டல் உள்ளிட்ட பல்வேறு நன்மைகள் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

பல்லின, பன்மத மற்றும் பல்வேறு சமூக நிலைகளிலுள்ள ஒரு நாடான இந்நாட்டிலே அமைதியாகவும், ஒற்றுமையாகவும் ஒருவருக்கொருவர் மதிப்பளித்து துரித அபிவிருத்தியினை நோக்கி பயணிக்கும் ஒரு நாடாக மாற்றியமைக்கும் நோக்குடன், இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

### 3.2.2. சட்ட ஆவணங்களை பெற்றுக் கொடுப்பதற்கான நடமாடும் சேவைகள்

இன பேதமின்றி அனைத்து இலங்கையர்கள் மத்தியிலும் பரஸ்பர நம்பிக்கையினை விருத்தி செய்து சமூகத்தின் வசதிவாய்ப்பற்ற குழுக்களுக்கு சமவாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதன் ஊடாக பிரஜைகளில் ஒருவராக சமூகத்திலே வாழ்வதற்குத் தேவையான

அடிப்படை சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொடுப்பதே இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

ஒரே இடத்தில் இந்த அனைத்துச் சேவைகளையும் மக்களுக்குத் தடையின்றி பெற்றுக் கொள்வதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதுடன், இந்த சேவைகள் அனைத்தும் பொது மக்களுக்கு இலவசமாக

பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. (உதாரணமாக தேசிய அடையாள அட்டைக்குத் தேவையான புகைப்படங்கள் மற்றும் முத்திரைகள், பிறப்புச் சான்றிதழ், விவாகச் சான்றிதழ் மற்றும் மரண சான்றிதழ் என்பவற்றிற்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் மற்றும் புதிய விவாகங்களுடன் தொடர்புடைய கட்டணங்கள் என்பனவும் அந்த நபர்களிடம் எதுவிட கட்டணமுமின்றி பெற்றுக்கொடுக்கப்படுகின்றன.)

இதனூடாக மக்களுக்குக் காலம் மற்றும் சிரமம் என்பன மீதப்படுத்தப்படுவதுடன், பிரஜை என்ற ரீதியில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான அடிப்படை ஆவணமான தேசிய அடையாள அட்டையினைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுவதன் மூலம் அவர்கள் சமூகமயப்படுத்தப்படுகின்றனர். 2015ம் வருடத்திற்குள் பிரதேச செயலகப் பிரிவுகள் ஐந்தினை உள்ளடக்கும் விதத்தில் சட்ட உதவி ஆவணங்களை வழங்கும் நடமாடும் சேவை நடாத்தப்பட்டது. ஹிங்குராங்கெத்த, வலப்பனை, அயகம, பெல்மடுல்ல மற்றும் ஹாலிஎல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் நடாத்தப்பட்டது.

இதற்கு மேலதிகமாக கிரியல்ல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மக்களுக்காக அவர்களின் அடிப்படை சட்ட ஆவணங்களை பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்காக அனைத்து குடும்பங்களுக்கும் ஒரு கோவை என்ற ரீதியில் சட்ட ஆவணங்கள் அடங்கிய விபரத்துடன் 5000 கோவைகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இதன் போது பெற்றுக்கொடுக்கப்பட்ட சேவைகள்,

- தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொடுத்தல்
- 2015 ஆம் ஆண்டிலே சுமார் 967 பேருக்கு தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.
- பிறப்புச் சான்றிதழ் பெற்றுக் கொடுத்தல், காலம் கடந்து பிறப்பினை பதிதல், திருத்தங்கள், அன்னளவான வயதுச் சான்றிதழ் பெற்றுக் கொடுத்தல்,
- 2015 ஆம் ஆண்டிற்கு சுமாராக 2073 பேருக்கு மேற்படி ஆவணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

- புதிய விவாகங்களை செய்து வைத்தல்

- 2015 ஆம் ஆண்டிலே மாத்திரம் விவாகமாகாது ஒன்றாக வாழ்க்கை நடாத்தும் நபர்கள் 30 பேருக்கு இலவசமாக விவாகப் பதிவு செய்து வைக்கப்பட்டது.

- காணாமற்போன அடையாள அட்டைகளுக்காக பொலிஸ் சான்றிதழ்களை வழங்குதல்

- காணாமற்போன தேசிய அடையாள அட்டைகளுக்காக பொலிஸ் அறிக்கைகள் இலவசமாக பெற்றுக்கொடுக்கப்படுகின்றன.

- கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொடுத்தல்

- சமாதான நீதவான் சான்றிதழ்களைப் பெற்றுக்கொடுத்தல்.

இதனூடாக தேசிய அடையாள அட்டைகள் மற்றும் பிறப்புச் சான்றிதழ்கள், மரண மற்றும் விவாகச் சான்றிதழ்கள் என்பவற்றுடன் தொடர்புடைய சத்தியக் கடதாசிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- முதியோர் அடையாள அட்டைகளை பெற்றுக் கொடுத்தல்.

சிரேஷ்ட பிரஜைகளுக்காக இலவசமாக புகைப்படங்களைப் பெற்றுக்கொடுத்து முதியோர் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை

எடுக்கப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டிலே சுமார் 507 பேர் இதன் மூலம் நன்மையடைந்துள்ளனர்.

இந்த நடமாடும் சேவைகள் முக்கியமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள், தோட்டப்புற பிரதேசங்கள், பின்தங்கிய பிரதேசங்கள் என்பன உள்ளடக்கப்படும் வகையில் நடாத்தப்பட்டுள்ளன. (முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, இரத்தினபுரி, பதுளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்கள்)

2013 ஆம் ஆண்டு தொடக்கம் அமைச்சின் நீதி நியாயத்திற்காக சமமான அந்தஸ்தினை வழங்கும் கருத்திட்டத்தின் ஊடாக (ருனேஷ் அனுசரணை) நடாத்தப்பட்ட சட்ட ஆவணங்களைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாக 12 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது இனங்காணப்பட்ட புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டு 2014 ஆம் ஆண்டு முதல் நடமாடும் சேவைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.







### 3.2.3 சமூக ஒருமைப்பாட்டு இளைஞர் பாசறை

பல்வேறு இனங்களைச் சேர்ந்த இளைஞர்களிடையே சமாதானம், சகவாழ்வு மற்றும் சமூக ஒருமைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட சமூக இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதன் ஊடாக இதய சுத்தியுடன் கூடிய இளம் சமுதாயம் ஒன்றினை உருவாக்குவதே இந்த இளைஞர் பாசறையின் நோக்கமாகும்.

இளம் சமுதாயத்தினர் நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்பதற்கும் மற்றும் சமூகத்திலே மாற்றமொன்றினை ஏற்படுத்துவதற்கான செயற்பாட்டிலே முன்னணி வகிக்கக் கூடிய குழுவொன்றாக புரிந்து கொண்டு அமைச்சினால் ஒவ்வொரு ஆண்டிலும் விசேட நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றாக ‘‘சமூக ஒருமைப்பாட்டு’’ இளைஞர் பாசறை நடாத்தப்படுகின்றது.

ஒரு வருடத்தில் இவ்வாறான பாசறைகள் 04 வீதம் நடாத்தப்படுவதுடன், ஒரு பாசறையில் சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியவாறு 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர் யுவதிகள் 100 – 150 இடைப்பட்டவர்கள் பங்கேற்கச் செய்யப்பட்டனர்.

இந்த இளைஞர் பாசறையில் தலைமைத்துவம் மற்றும் ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பங்கேற்பின் மூலம் விரிவுரைகள், சங்கீதமானது நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பிரபல ஊடகமாகக் கொண்டு சங்கீதத்தின் ஊடாக சமூக ஒருமைப்பாட்டினை இளைஞர்களின் மத்தியில் கொண்டு செல்லும் பொருட்டு சமூக ஒருமைப்பாட்டினை தொனிப்பொருளாகக் கொண்ட இசை நிகழ்ச்சிகள், சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிக்கும் புதிய வழிமுறைகள் அடங்கிய தொழிற்பாட்டு நிகழ்ச்சித் திட்டமொன்று மற்றும் இளைஞர் யுவதிகளின் திறமைகளை வெளிக்காட்டுவதற்கான வாய்ப்பளித்தல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் அடங்கும்.

2015 ஆம் ஆண்டினுள் 2 இளைஞர் பாசறைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், சுமார் 200 இளைஞர் யுவதிகள் இதில் கலந்துகொண்டுள்ளனர். கண்டி, பதுளை ஆகிய மாவட்டங்களில் இவ்வாறான பாசறைகள் நடாத்தப்பட்டுள்ளன.

இந் நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமூகமளித்த இளைஞர் யுவதிகளுக்கு தொழில் பயிற்சி அதிகாரசபையானது தொழில் வழிகாட்டல் சேவையின் ஊடாக அவர்களுக்குக் காணப்படுகின்ற பயிற்சிகள் மற்றும் அதனூடாக ஏற்படுகின்ற தொழில் வாய்ப்புக்கள் என்பன பற்றிய விளக்கத்தினையும் வாய்ப்பினையும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





### 3.2.4 பெற்றோரை இழந்த மற்றும் ஒரு பாதுகாவலர் மாத்திரம் உள்ள சிறுவர்களுக்கான சமூக ஒருமைப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்

சமூக ஒருமைப்பாட்டுக் கொள்கையின் ஒரு இலக்காக அமைவது கல்விக்கான அணுகுவழியாகும். இந்த உரிமையினைப் பெற்றுக் கொடுப்பதற்காக பொருளாதார, சமூக ஏற்றத்தாழ்வுகள் அல்லது இனத்துவத்தின் காரணமாகவோ அல்லது சமயம் காரணமாக கல்வித் துறையினுள் எதுவித அநீதி அல்லது ஓரங்கட்டுதலை தடுப்பதற்காக கவனம் செலுத்தப்படுகின்றது.

ஓரங்கட்டப்பட்டுள்ள குழுக்களைச் சேர்ந்த பிள்ளைகளின் கல்விக்கான அணுகுவழியினை பெற்றுக்கொடுக்கும் பொருட்டு பெற்றோரை இழந்த அல்லது ஒரு பாதுகாவலர் மாத்திரம் உள்ள பாடசாலை பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று எமது அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டது. 2015 புத்தளம், குருணாகல், கண்டி, மட்டக்களப்பு, மாத்தறை மற்றும் கொழும்பு மாவட்டங்களில் இந்நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1270 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு வசதியளிக்கப்பட்டுள்ளன.

இதனூடாக குறைந்த சலுகையுடைய மாணவர்களின் கல்விக்கு வசதியளிப்பதன் ஊடாக அவர்களை கல்வியின் பக்கம் கவனம் செலுத்த வைப்பதற்கும், சமூகத்திலே இலகுவில் பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய குழுக்களின் அறிவு, திறமை, மனப்பாங்கு விருத்தி என்பவற்றின் ஊடாக அவர்கள் சமூகமயப்படுத்தப்படுவது உறுதிப்படுத்தப்படுகின்றது.





**3.2.5 கலாசாரம் மற்றும் சமய விழாக்கள்**

பல்லின சமூகங்கள் வாழும் ஒரு நாடான இலங்கையினுள் சிங்களவர், தமிழர் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய இனத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த இனங்களுக்கு ஏற்ப அவர்களது சமயம், கலாசாரம் என்பன ஒன்றையொன்று வேறுபட்டு காணப்படுகின்றது. தைப்பொங்கல், சிங்கள தமிழ் புத்தாண்டு விழா, ஹஜ் விழா, தீபாவளி, சரஸ்வதி பூஜை, நத்தார் விழா என்பன அவ்வாறான கலாசார விழாக்களாகும். இவ்வாறான ஒன்றுக்கொன்று வித்தியாசமான சமய மற்றும் கலாசார விழாக்களை கொண்டாடும் நிகழ்வானது எமது அமைச்சினால் வருடா வருடம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஒரே சமூகத்தினுள் ஒன்றுக்கொன்று வித்தியாசமான சமய மற்றும் கலாசாரங்களின் பெறுமதிகள் பற்றி அறிந்து கொள்வதற்கு இது சந்தர்ப்பமாக அமைகின்றது. அதனூடாக இலங்கைச் சமூகத்தினுள் வாழுகின்ற ஒவ்வொரு இனத்தவர்களிடையேயும் பரஸ்பர நம்பிக்கை, புரிந்துகொள்ளல் மற்றும் பரஸ்பர கௌரவமளித்தல், வரவேற்பு என்பன உறுதிப்படுத்தப்படுகின்றது. இன பேதமின்றி அனைத்து இனத்தவர்களும் இந்த விழாக்களில் கலந்துகொள்கின்றனர். 2015 ஆம் ஆண்டிலே எமது அமைச்சினால் இவ்வாறான விழாக்கள் யாழ்ப்பாணம், கண்டி, மாத்தளை, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் அவ்விழாக்கள் நடாத்தப்பட்டன.





**3.2.6 வெளி நிறுவனங்கள் அமுல்படுத்துகின்ற சமூக ஒருமைப்பாட்டுக்கான நிதி அனுசரணை வழங்குதல்.**

சமூக ஒருமைப்பாட்டினைக் கட்டியெழுப்பும் நோக்கில் சமூக ஒருமைப்பாட்டுடன் தொடர்புடைய நிகழச்சித் திட்டங்கள் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளல் அல்லது நிதி பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளல் என்பன எமது அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிலே நிதிசார் அனுசரணை பெற்றுக்கொடுக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருமாறு.

- களுத்துறை - பண்டாரகம திரி தரு பியச சிறுவர் இல்லத்திற்காக (மனவளர்ச்சி குன்றிய விசேட சிறுவர்கள்) மரத்திலான தளபாடங்கள் வழங்குதல்.

- காலி - தவலம பிரதேசத்திலுள்ள பாடசாலைகள் இரண்டில் விசேட கல்வி வகுப்பறைக்கு தேவையான கற்றல் உபகரணம் மற்றும் காகிதாதிகள் வழங்குதல். (தவலம வித்யாராஜ வித்தியாலயம் மற்றும் பனாங்கல மஹாபோதி வித்தியாலத்தின் விசேட கற்கைப் பிரிவில் கல்வி கற்கும் சிறுவர்களுக்காக)

- கம்பஹா - மாஹுத்துவ கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவிலுள்ள சனசமூக நிலையத்திற்காக மலசல கூட வசதியை வழங்குதல்.

- குருநாகல் - குருநாகல் எங்களால் உங்களுக்கு கைகொடுப்பு, கைகோர்ப்பு ஒன்று விசேட தேவைப்பாடுடைய சிறுவர்களுக்கான மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் (மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பிரதேச செயலகங்கள் 05 இல்)

- புத்தளம் - மிகக் குறைந்தளவு வளங்களையுடைய கஷ்டப் பிரதேசங்களிலுள்ள பாடசாலை மாணவர்களின் எதிர்காலத்திற்காக தொழில் வழிகாட்டல் ஊடாக சமூகமயப்படுத்தல் மற்றும் உரிய பாடசாலைகளின் நூலகத்திற்காக புத்தங்களை வழங்குதல். (வனாத்தவில்லுவ, மற்றும் கல்பிட்டி பிரதேச செயலகங்கப் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட சிங்களம், தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் நான்கைச் சேர்ந்த மாணவர்கள்)

- மாத்தறை - நிககொட சுவர் ஓவியங்களால் சிறுவர்களின் இதயத்தில் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவோம். (பாடசாலை சிறுவர்களுக்கான சித்திரப் போட்டி மற்றும் மொழிக்கொள்கை ∴ சமூக ஒருமைப்பாடு தொடர்பாக அவர்களை விழிப்புணர்வூட்டுதல்.

- மன்னார் - கலாசாரம் மற்றும் விளையாட்டு மூலம் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் ஊடாக சமாதானத்தினை கட்டியெழுப்புதல் மற்றும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்துதல்

- யாழ்ப்பாணம் - வாதரவத்தை கிராம சேவகர் பிரிவிலுள்ள விக்கினேஸ்வரன் முன்பள்ளிக்கு தேவையான நீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குதல்

- இரத்தினபுரி - பலாங்கொடை கூட்டுறவு கல்வியினை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் சமூக ஒருமைப்பாடு (ராஸ்ஸகல தமிழ் வித்தியாலயம்

மற்றும் ராஸ்ஸகல சிங்கள வித்தியாலயம் ஆகியவற்று நூலக வசதிகளை ஆரம்பித்தல்)

- களுத்துறை - ஹொரணை ஸ்ரீ பாலி, தேசிய ஐக்கியம் மொழி மூலம் கட்டியெழுப்பவதற்கான நான்கு நாள் கல்விச் சுற்றுலா ( ஸ்ரீ பாலி வித்தியாலயத்தின் 10 - 11 தரங்களில் கல்விகற்கும் தமிழ் மொழியை கற்கும் மாணவர்கள் ) ஹொரணை ஸ்ரீ பாலிகா.

- கொழும்பு - திம்பிரிகஸ்யாய பிரதேசத்தில் நிகழும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பிள்ளைகளுக்கு ஏற்படும் சித்திரவதை என்பனவற்றினை தடுத்து சிறுவர் தலைமுறையினை பாதுகாத்தல்

- களனி - விசேட தேவைப்பாடுடைய சிறுவர்களுக்கு வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

- அகலவத்தை - அகலவத்தை, கலேவத்தை தமிழ் ஆரம்ப பாடசாலைகளின் மாணவர்களுக்காக மலசலகூடத்தினை அமைத்துக்கொடுத்தல்.

- மத்துகம - மத்துகம பிரதேச செயலகப் பிரிவின் 79ஊ பதுகம நவஜனபத சனசமூக நிலையத்திற்காக பொது மலசல கூடத்தினை அமைத்தல்.

- கொழும்பு - சீதாவக அன்புக் கூடம் வடக்கு தெற்கு பாடசாலை மாணவர்களின் ஒருமைப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் ( சென் ஜோன் பொஸ்போ பாடசாலை ஆசிரிய மாணவர்கள் மற்றும் கிளிநொச்சி நாகேஸ்வர பாடசாலையின் ஆசிரிய மாணவர்கள்)

மேலும் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் நடவடிக்கை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அத்துடன் கீழே குறிப்பிட்டுள்ளவாறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

- அரச சேவையிலுள்ள பெண்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்
- வைத்திய சேவை
- பால்நிலை சமத்துவ அடிப்படையிலான வன்முறையை ஒழித்தல்.

### 3.2.7 மதத்தலைவர்கள், சமுதாயத்தலைவர்களை ஒன்றிணைப்பதன் மூலம் நல்லுறவினை விருத்தி செய்வது தொடர்பாக கலந்துரையாடலை நடாத்துதல்.

பிரதேச செயலப்பிரிவில் மதங்களுக்கிடையிலான புரிந்துணர்வினை வழங்கி பரஸ்பர நம்பிக்கையை கட்டியெழுப்புவதன் மூலம் ஒருவருக்கொருவர் மதிப்புக்கொடுக்கும் சமுதாயத்தை கட்டியெழுப்பும் நோக்குடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டதுடன் சர்வ மதக் குழுக்கள், மதப் போதனை பாடசாலை ஆசிரிய மாணவர்கள், சிவில் பாதுகாப்பு குழு, சமுதாயத்தலைவர்கள், இளைஞர் குழுக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் ஆகியோர் இந்நிகழ்வுக்கு சமூகமளித்திருந்தனர்.

இங்கு ஒவ்வொரு மத கலாசாரங்கள் தொடர்பாக ஒவ்வொருவரும் அறிந்கொள்வதுடன் பிரதேசத்தில் நிகழும் மதங்களுக்கிடையிலான பிரச்சினைகள் மற்றும் அவற்றை தீர்த்துவைக்கும் முறை என்பன தொடர்பாக கலந்துரையாடப்பட்ட விடயங்களாகும்.

சமுதாயத்தினுள் மதங்களுக்கிடையிலான பிரச்சினைகள் எழும் சந்தர்ப்பத்தில் அவற்றை தடுப்பதற்கு முன்னுரிமை வழங்குதல். மதங்களுக்கிடையில் முரண்பாடுகளை தவிர்த்துக்கொள்ளுதல், மதங்களுக்கிடையிலான ஒற்றுமையை உறுதிப்படுத்திக்கொள்ளுதல் போன்றன இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் ஒரு நற்காரியமாகும்.

இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் பதுளை, மாத்தறை, காலி மற்றும் கேகாலை மாவட்டங்களிலுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளில் நடாத்தப்பட்டுள்ளன.






### 3.2.8. சகவாழ்வு மேம்பாட்டிற்காக ஊடக நிகழ்ச்சித்திட்டம்






**செயற்திட்டத்தின் படியான செயலாற்றுகை**

**சமூக ஒருமைப்பாடு மற்றும் இன அலுவல்கள் பிரிவுக்கான பொருளாதார முன்னேற்றம்**




| தொ /இல | விபரம் | உத்தேசிக்கப்பட்ட தொகை (ரூபா) | உண்மைச் செலவு (ரூபா) | வீதம் மூ |
|---|---|---|---|---|
| 01 | சமூக ஒருமைப்பாட்டு தேசிய கொள்கையினை குறித்த பங்காளர்களின் ஊடாக செயற்படுத்தல். | **15,600,000.00** | 11,935,460.12 | **76.51** |
| 03 | சமூகத்தில் இலகுவில் பாதிப்பிற்கு உள்ளாக்கக்கூடிய மக்களின் அறிவு, திறன் விருத்தி மற்றும் மனப்பாங்கு மாற்றத்தின் மூலம் சமூகமயமாக்களை உறுதிப்படுத்துதல் | **3,000,000.00** | 1,451,768.20 | **48.39** |
| 04 | சமூகத்திற்கிடையே அவர்களது தனித்துவத்தைப் பாதுகாத்தல் மற்றும் பரஸ்பர புரிந்துணர்வினை விருத்தி செய்தல் என்பவற்றின் முக்கியத்துவம் பற்றி அறிவூட்டல் | **6,400,000.00** | 2,649,792.95 | **41.40** |
| | **மொத்தம்** | **25,000,000.00** | 16,037,021.27 | **64.15** |

## 3.3. நிர்வாகப் பிரிவு

### அறிமுகம்


அமைச்சில் சிறந்த காரியாலய நிர்வாக சூழலை கொண்டு நடாத்தல், மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமை செய்தல், உத்தியோகத்தர்களது வேலை தொடர்பான தேவைகளை பூர்த்தி செய்தல், மற்றும் அமைச்சின் சேவைகளை அமுல்படுத்துவதற்கு உதவி புரிதல் போன்றன நிர்வாகப் பிரிவின் பிரதான நோக்கங்களாகும்.

### நிர்வாகப்பிரிவின் நடவடிக்கைகள்

- அமைச்சின் உள்ளக நிர்வாகம்
- பதவி அனுமதி பெறல்
- ஆட்சேர்ப்பு திட்டங்களை உருவாக்கள்
- நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு தொடர்பான நடவடிக்கைகள்
- தனியார் கோவை நடாத்துகை
- ஒழுக்கம் தொடர்பான நடவடிக்கைகள்
- பயிற்சி நடவடிக்கைகள்
- கட்டிடம், வாகனம் உள்ளடங்களாக அனைத்து பௌதீக வளங்களினதும் நடாத்துகை
- பாராளுமன்ற உபதேச செயற்குழுவினை ஒருங்கிணைப்புச் செய்தல்
- அமைச்சரவைப் பத்திரிகை தயாரித்தல்

**செயற்திட்டத்தின் படியான செயலாற்றுகை**

**நிர்வாகப் பிரிவுக்கான நிதி முன்னேற்றம**




| தொ /,ல | விபரம் | உத்தேசிக்கப்பட்ட தொகை (ரூபா) | உண்மைச் செலவு (ரூபா) | வீதம் மூ |
|---|---|---|---|---|
| 01 | இரு மொழி இயலளவு மேம்படுத்தல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.்.தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர்களுக்கான கட்டாய தமிழ்ப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - கட்டம் ஐ - ஏஐ (நாட்கள் 10ஓ06) | 200,000.00 | 390,150.00 | 195.08 |
| 02 | தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர்களுக்கான சேவை ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 300,000.00 | 381,419.52 | 127.14 |
| 03 | அறிவூஇ மனப்பான்மை மற்றும் தேர்ச்சியினை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டத்திற்காக | 800,000.00 | 487,638.94 | 60.95 |
| 04 | இளங்கலைமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் | 135,000.00 | 135,000.00 | 100.00 |
| 05 | தொழில் தேர்ச்சி மேம்பாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 65,000.00 | 71,550.00 | 110.08 |
| | **மொத்தம்** | **1,500,000.00** | **1,465,758.46** | **97.72** |

## 3.4 திட்டமிடல் பிரிவு

**அறிமுகம்**

திட்டமிடல் பிரிவானது, தேசிய கலந்துரையாடல்கள் பற்றிய அமைச்சின் பிரதான பிரிவுகளில் ஒன்றாகும். பெற்றுக் கொள்ளப்படும் பெறுபேறுகள், வினைத்திறன், விளைத்திறன் பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக துறைசார் அடிப்படையில் அமுல்படுத்தப்படும் கருத்திட்டம்.்.நிகழ்ச்சித்திட்டம் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு என்பன மேற்கொள்ளப்படும். மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உயர் முகாமைத்துவ, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்கு முன்வைக்கப்படும்.

**திட்டமிடல் பிரிவின் பிரதான பணிகளாவன:**

- அமைச்சின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம், வருடாந்த செயலாற்றுகைத் திட்டம் என்பவற்றை தயாரிக்க அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு
- அமைச்சு அடையாளம் கண்டுள்ள முன்னோடி கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதனை ஒருங்கிணைத்தல்.
- அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை ஒழுங்குப்படுத்தல் மற்றும் மதிப்பிடல்.
- மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் அதனை அமைச்சின் செயலாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம், தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம், வெளிநாட்டு உதவி மற்றும் வரவு செலவு திட்ட மதிப்பீட்டு திணைக்களம் மற்றும் ஏனைய அக்கறைகொண்ட பிரிவினர்களுக்கு சமர்பித்தலும்.
- முன்னேற்றம் மற்றும் செயற்பாட்டு திட்ட அற்க்கையை அமைத்து வரவு செலவு தொடர்பான கலந்துரையாடலில் பாராளுமன்றத்திற்கு முன்வைத்தல்.
- அமைச்சின் தரவுகளை பராமரித்தல், இற்றைப்படுத்தல் மற்றும் விருத்தி செய்தல்.
- வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயாரித்து பாராளுமன்றத்திற்கும், நிதி அமைச்சுக்கும் கணக்காளருக்கும் சமர்ப்பித்தல்.

## 3.5 நிதிப் பிரிவு

**அறிமுகம்**

நிதி சேவைகள ஒருங்கிணைப்புச் செய்தல், ஏற்புடைய பிரிவுகளை ஒருங்கிணைப்பதனூடாக நிரூபிக்கத்தக்க நிதி தகவல்களை மற்றும் அமைச்சின் முகாமைத்துவ முறைமையை பராமரித்தல்.

**பிரதான பணிகள்**

- பிரதம கணக்காளர் என்ற வகையில் அமைச்சின் செயலாளருக்கு அமைச்சின் நிதிக் கடப்பாடுகளை பூர்த்தி செய்யவும் பாராளுமன்றத்திற்கு வகைப்பொறுப்புக்கூறவும் உதவுதல்.
- அரசாங்கத்தின் நிதி விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்கி செயற்படுதலை உறுதி செய்தல்.
- நிதி முகாமைத்துவம் உட்பட சிறந்த நிதி கணக்கீட்டு முறைமையை தாபித்தலும் பராமரித்தலும்.
- திறைசேரி, அமைச்சுக்கு கீழ்வரும் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டங்களுடன் ஒருங்கிணைந்து நிதி அறிக்கைகள் மற்றும் வரவு செலவு தேவைகளை தயாரித்தல்.்.இற்றைப்படுத்தல்.்.மீள்பார்வை செய்தல் மற்றும் பூர்த்தி செய்தல்.
- நிதி திட்டமிடல் மற்றும் வரவு செலவை தயாரித்தல்.
- உரிய நேரத்திற்கு மற்றும் துல்லியமான நிதி அறிக்கையிடலை உறுதிப்படுத்தல்.
- அமைச்சின் சொத்துக்களை முகாமை செய்தல்.

## 3.6 உள்ளக கணக்காய்வு பிரிவு

**அறிமுகம்**

அமைச்சில் மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்கள் ஆகியவற்றின் அணைத்து தளத்திலும் மேற்கொள்ளப்படும் சேவைகள் மற்றும் பணிகளை மீளாய்தல், அளவிடுதல், மதிப்பிடுதல், மற்றும் உள்ளக நிர்வாக முறையில் விடய பங்களிப்பு தொடர்பாக அறிக்கை இடுவதன் மூலம் முகாமைத்துவத்திற்கு உதவுதல்.

**உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பணிகள்**

- பிழைகள் மற்றும் மோசடிகள் தடுப்பதற்காக அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களில் அமுலாக்கப்படும் உள்ளக நிர்வாக முறைமையின் வெற்றிக்கான தன்மையை மதிப்பிடலும் உள்ளக நிர்வாகத்தை பலப்படுத்த உதவுதல்.

- கணக்குகள் மற்றும் வேறு அறிக்கைகளின் நம்பகத்தன்மையை நிர்ணயித்தல் மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டு முறைகளினால் சரியான நிதிக் கூற்றுக்களை தயார் செய்வதற்குத் தேவையான தகவல்கள் வழங்கப்படுகின்றனவா என்பதை பரிசீலனை செய்தல்.

- நிறுவனத்தின் பதவியணியினருக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் அவர்களின் செயலாற்றுகையின் தரத்தை மதிப்பீடு செய்தல்.

- அமைச்சு மற்றும் அதன் கீழ் இருக்கின்ற நிறுவனங்களின் சொத்துக்களை எல்லா வகையான பாதிப்புகளில் இருந்தும் எவ்வளவு தூரம் பாதுகாக்கப்படுகிறது என்பதை தேடிப்பார்த்தல்.

- தாபனக் கோவை, நிதிக்கோவை, பொது நிர்வாகம், திறைச்சேரி மற்றும் வேறு சுற்றறிக்கை மற்றும் நெறிப்படுத்துகை கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை கண்காணித்தல்.

- தேவையான சந்தர்ப்பங்களில் விசேட விசாரணைகளை நடாத்தல்

- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை நடாத்துதல்.

# 04.அரசகரும மொழிகள் திணைக்களம் மற்றும் அதன் செயலாற்றுகைகள்

## 04.அரசகரும மொழிகள் திணைக்களம்

அறிமுகம்

1956 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாக 1956.10.01 ஆம் திகதியன்று அரசகரும மொழிகள் திணைக்களம் தாபிக்கப்பட்டது. 1987- 13ஆம் அரசியலமைப்பு திருத்தத்திற்கும் 1987- 16ஆம் அரசியலமைப்பு திருத்தத்திற்கும் அமைவாக சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் இரண்டும் இலங்கையின் அரசகரும மொழிகளாக்கப்பட்டதோடுஇ ஆங்கிலம் இணைப்பு மொழியாக்கப்பட்டது.

அரசியலமைப்பின் ஐஏஆம் அத்தியாயத்தின் 18ஆம் மற்றும் 19ஆம் உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மொழிக் கொள்கையை வினைத்திறன் மிக்கதாக நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்கும் நிறுவனமாக தற்போது அரசகரும மொழிகள் திணைக்களம் செயற்படுவதோடுஇ அதற்கமைய மேற்குறித்த மூன்று மொழிகளுக்குமுரிய மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்து அரசாங்கத்திற்கு வழங்கல்இ அரசாங்க உத்தியோகத்தர்களின் மொழித்தேர்ச்சியை விருத்தி செய்தல்இ கலைச்சொற்றொகுதிகளை தயாரித்தல்இ மொழி தொடர்பான பாடப்புத்தகங்கள் மற்றும் அகராதிகளை தொகுத்தல் முதலான பணிகள் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. 'பா'ா மந்திரய''இ இலக்கம் 341/7இ கோட்டே வீதிஇ ராஜகிரிய எனும் முகவரியில் அமைந்துள்ள இத் திணைக்களத்தின் பிரதான பதவியை அரசகரும மொழிகள் ஆணையாளர் வகிக்கிறார்.

### நோக்கு

சகவாழ்வுடன் கூடிய சமாதானமான மும்மொழிச் சமூகம்.

### செயற்பணி

இன ஒற்றுமை மற்றும் சமாதானத்தை நோக்கமாகக் கொண்ட அரசகரும மொழிக் கொள்கையை வினைத்திறன்மிக்கதாக நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்கலும் ஒருங்கிணைத்தலும்.

### திணைக்களத்தினால் நிறைவேற்றப்படும் பணிகள்

- பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01∴2014 மற்றும் 07∴2014 பிரகாரம் அரசகரும
- மொழித்தேர்ச்சியை பெற்றுக்கொள்ள வேண்டிய அரச உத்தியோகத்தர்களுக்கான எழுத்து மூல மற்றும் வாய்மூல பரீட்சைகளை நடாத்தலும் சான்றிதழ்களை வழங்கலும்.
- அரச மற்றும் பகுதி அளவிலான அரச நிறுவனங்களின் மொழிபெயர்ப்பு பணிகளை நிறைவேற்றல் (சிங்களம் ∴தமிழ்∴ ஆங்கிலம்)
- பல்வேறு துறைகளுக்குரிய கலைச்சொற்றொகுதிகளை தொகுத்தல் (சிங்களம் ∴தமிழ்∴ ஆங்கிலம்)
- அரச உத்தியோகத்தர்களின் மொழித் தேர்ச்சி பரீட்சைகளுக்கான பாடப்புத்தகங்களையும் வழிகாட்டல் நூல்களையும் தொகுத்தலும் விற்பனை செய்தலும்.
- மும்மொழி அகராதிகளை தொகுத்தல்.
- நவீன தொழிநுட்ப முறைகளை பயன்படுத்தி சிங்களம் ,தமிழ்,ஆங்கிலம் ஆகிய மொழிகளைப் போன்றே சர்வதேச ரீதியான மொழிகளை கற்பித்தலும் பரீட்சைகளை நடாத்தலும்.
- வெளி நிறுவனங்களின் பணிக் குழுவினருக்கு மொழித் தேர்ச்சி பரீட்சைகளையும் வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகளையும் நடாத்தல்.

- 8.பல்கலைக்கழகங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட வேறு கல்வி நிறுவனங்களிலும் மொழிபெயர்ப்பு பாடநெறிகளை பயில்வோருக்கு செயன்முறைப் பயிற்சியை வழங்கல.

- மேற்குறித்த அனைத்து பணிகளையும் நிறைவேற்றதுவதன் பொருட்டு திணைக்களத்தில் அபிவிருத்தி, பரீட்சை, மொழிபெயர்ப்பு, மொழி ஆய்வுகூடம், வெளியீடுகள் மற்றும் விற்பனை,கலைச்சொற்றொகுதி தொகுப்பு,ஆராய்ச்சி,நூலகம் ஆகிய பிரிவுகள் தாபிக்கப்பட்டுள்ளன.

## 4.1 மொழித் தேர்ச்சயைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுகின்ற வசதிகளை வழங்குதல்

### 01.புத்தகங்கள் மற்றும் பயிற்சிப்புத்தகங்களை அச்சிடுதல்

வல்லுனர்களுக்கு மற்றும் அரச கரும மொழியைக் கற்பதற்கு விருப்பமுள்ள இஅனைவருக்கும் எழுத்து மொழியொன்றாக ஈடுபடுத்திக் கொள்ளக்கூடியதாக பாடப்புத்தகங்கள் மற்றும் ஏனைய கைநூல்களை ஆக்கம் செய்தல் அரச கரும மொழிகள் திணைக்களத்தின் பிரதான பணியாகும். அதன் படி 2015ஆம் வருடத்தில் பேச்சுத் தமிழ் புத்தகங்கத்தின் 10,000 பிரதிகள் மற்றும் எழுத்துத் தமிழ் புத்தகங்கத்தின் 5000 பிரதிகள் அச்சிடப்பட்டது. மும்மொழி அகராதி 1000பிரதிகள் அச்சுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரச அலுவலர்களின் மொழித் தேர்ச்சி சம்பந்தமாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுச் சிபாரிசுகளை செயற்படுத்துவதன் கீழ் இலக்கம் 8.2 (அ) சிபாரிசின் பிரகாரம் அரச அலுவலர்களுக்கு இரண்டாம் மொழியைக் கற்பதற்காக வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் இலகுவாக உபயோகிக்கக் கூடிய இலகு நடையிலான 04 பாடப் புத்தகங்கள் வீதம் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் 08 புத்தகங்களைத் தயாரித்தல் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட பாரியதொரு பொறுப்பாகும்.

அதன் ஐஏ ஆம் மட்ட – சிங்கள பாடப்புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடங்களைக் கற்பிக்கும் முன்னோடி ஆய்வுக் கருத்தரங்கு அரச சேவையின் ஐஏ ஆம் மட்டத்துடன் சம்பந்தப்பட்ட அலுவலர்களிற்காக 1915.08.27.28.29ஆம் திகதிகளில் யாழ்ப்பாண நகர மும்மொழி கற்கை நிலையத்தில் நடாத்தப்பட்டது.

**ஐஏ ஆம் மட்ட – சிங்கள பாடப்புத்தக பாடங்களைக் கற்பிற்கும் முன்னோடி நிகழ்வின் சில சந்தர்ப்பங்கள்**







இதற்குச் சமாந்திரமாக 111 ஆம் மட்டம் சிங்கள பாடப் புத்தகத்தின் பாடங்களைக் கற்பிற்கும் முன்னோடிக் கருத்தரங்கு 2015.10.29மற்றும் 30ஆம் திகதிகளில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் பிரதம ஆசிரியர் லிலானி அமரசிங்ஹ அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அவ்வாறே 111 ஆம் மட்ட தமிழ் பாடப்புத்தகத்தின் பாடங்களை கற்பிற்கும் முன்னோடிக் கருத்தரங்கு 2015.12.03∴05ஆம் திகதிகளில் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவில் மற்றும் ஐஏ மட்ட தமிழ் பாடப்புத்தகத்தின் பாடங்களை கற்பிற்கும் முன்னோடிக் கருத்தரங்கு 2015.10.19ஆம் திகதி நிர்மானப் பயிற்சி நிலையத்தில் பேராசிரியர் எஸ்.யோகராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

2015ஆம் ஆண்டிற்குள் பாடப் புத்தகங்கள் தயாரித்தலானது நிறைவடைந்துள்ளதோடு ஐஏ ஆம் மட்ட பாடப் புத்தகத்தின் (சிங்களம் மற்றும் தமிழ்) 10000 பிரதிகளும், ஐஐஐ ஆம் மட்ட பாடப் புத்தகத்தின் (சிங்களம் மற்றும் தமிழ்) 30000 பிரதிகளும், ஐஐ ஆம் மட்ட பாடப் புத்தகத்தின் (சிங்களம் மற்றும் தமிழ்) 40000பிரதிகளும், ஐ ஆம் மட்ட பாடப் புத்தகத்தின் (சிங்களம் மற்றும் தமிழ்) 10000 பிரதிகளும் அச்சிடுவதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புத்தகங்கள் மற்றும் மொழி பயிற்சி புத்தகங்கள் அச்சிடுவதற்காக 2015ஆம் ஆண்டில் செலவுத் தொகை ரூ. 22,583,682.20ஆகும்.

**02. மொழித் தேர்ச்சிப் பரீட்சைகளை நடாத்தல்.**

அரச உத்தியோகத்தர்களின் மொழி ஆற்றலை மதிப்பிடுவதையும் இருமொழி ஆற்றலை ஊக்கப்படுத்துவதையும் நோக்கமாக கொண்டு எழுத்து மற்றும் வாய்மூலப் பரீட்சைகளை நடாத்தப்பட்டதோடு, பரீட்சை பெறுபேறுகளை வெளியீடுதல் மற்றும் பரீட்சை பெறுபேறு ஆவணங்களை வெளியீடுதல் என்பன இடம்பெற்றது. தொழில்நுட்ப உபகரணங்களை பயன்படுத்தி கேட்டல் திறன் மதிப்பீட்டு பரீட்சை இவ் ஆண்டு ஒக்டொபர் மாதம் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

வாய்மூலப் பரீட்சையின் வினாத்தாள்களை தயாரிக்கும் செயலமர்வின் சில சந்தர்ப்பங்கள்





2015 ஆம் ஆண்டில் அரசகரும மொழித் தேர்ச்சி ஐஇஐஐஇஐஐஐஇஐஏ ஆம் மட்டங்களுக்காக 2015.05.31 ஆம் திகதி எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த 75606 விண்ணப்பதாரர்களுக்காக வாய்மூலப் பரீட்சை நடாத்தப்பட்டது. 30582 விண்ணப்பதாரர்கள் பரீட்சைக்கு தோற்றினார்கள்.

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மற்றும் கா.பொ. த (சா.:.த) இரண்டாம் மொழியில் சித்தியடைந்த பரீட்சாத்திகளுக்காக வாய்மூலப் பரீட்சை நடாத்தப்படுவதன் கீழ் முன்னைய ஆண்டுகளில் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த 44047 உத்தியோகத்தர்களுக்காக வாய்மூலப் பரீட்சை நடாத்தப்பட்டது.

2015 ஆம் ஆண்டில் 11 வெளி நிறுவனங்களில் பரீட்சைகள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 44047 பெறுபேறு ஆவணங்கள் மற்றும் 297 சான்றிதழ்கள் (பழைய) விநியோகிக்கப்பட்டுள்ளது.

விசேட பாதுகாப்பு தாளில் அச்சிடப்பட்ட பெறுபேறுகள் அனைத்து பரீட்சாத்திகளுக்கு வழங்குவதும் இவ் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. மொழித் தேர்ச்சி பரீட்சை நடாத்துவதற்காக 2015 ஆம் ஆண்டில் 220 மில்லியன் பணத் தொகை ஒதுக்கப்பட்டதோடு செலவுத் தொகை 212 மில்லியன் ஆகும்.







4.2 அரச மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்களுக்காக மொழிபெயர்ப்பு சேவையை வழங்கல் மற்றும் கலைச்சொற்களை தயாரித்தல்.

01. தரமான முறையில் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தரமான மொழிபெயர்ப்பு சேவையினை பெற்றுக் கொடுப்பது திணைக்களத்திற்கு உரிய இன்னுமொர் விசேட பணியாகும்.மொழி பெயர்ப்பு சேவையினை வினைத்திறனாக்குவதை அடிப்படையாக கொண்டு சிங்கள, தமிழ் தன்னியக்க மொழிபெயர்ப்பு மென்பொருளொன்றை மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்து தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவ்வாறே சிங்கள.:. தமிழ் மொழிக்கு இணையான கடிதங்கள் மொழிபெயர்க்கப்படுகின்றன. இதற்காக திணைக்களத்தின் 4 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

02.நிபுணர்கள், வல்லுநர்கள், மாணவ மற்றும் எழுத்தாளர்கள், மற்றும் பொதுவாக அனைத்து மக்களினதும் அறிவு வளர்ச்சிக்கு உதவும் வகையில் புதிய மும்மொழி கலைச்சொற்களை திணைக்களத்தின் கலைச்சொற்றகராதிப் பிரிவால் தயாரிக்கப்படுகின்றது. அதன் படி,

• கட்டிடம் மற்றும் நிர்மானம்

• இலங்கை இராணுவம், இலங்கை கடற்படை மற்றும் இலங்கை விமானப்படைக்குரிய கலைச்சொற்கள்

• பொலிஸ் நுட்ப கட்டளைகள்

• அரசாங்க நிர்வாகம் (தாபன விதிக்கோவ)

• நிதி ஒழுங்குவிதிகள்

• காணி நிர்வாகம்

• தகவல் தொழில்நுட்பம் (சிங்களம் – ஆங்கிலம்)

• உளவியல்

• கணிதம்

• பௌதிகவியல்

• புள்ளிவிபரங்கள்

• விவசாயம்

• தாவரவியல்

• வரலாறு

• மொழியியல்

• இலக்கியம்

• கல்வி

ஆலோசனையியல் மற்றும் பொருளியல் உட்பட 22 மும்மொழி கலைச்சொற்றகராதிகளை பூர்த்தி செய்து திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பபட்டுள்ளது.

4.3.மொழிப் பயன்பாட்டுத் தொழில்நுட்பம், கருத்தரங்குகள் தொடர்பாக பரீட்சித்தல், பரிந்துரைகளை முன்வைத்தல் மற்றும் கருவிகளை தயாரித்தல்.

இதன் அடிப்படையில் மொழி அறிவு வளர்ச்சிக்கு பொழுதுபோக்கு ரீதியாக 10 துறைகள் ஊடாக 200 வினாக்கள் உள்ளடக்கிய கணினி சார்ந்த மொழி விளையாட்டுக்கள் (சிங்களம் ∴ தமிழ்) நிர்மாணிக்கப்பட்டதோடு இணையத்தளத்தில் வெளியிடப்பட்டன.

சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் இருக்கும் குறியீட்டுப் பெயர்கள் தொடர்பான தகவல்களை சேகரித்து, அதற்குரிய அர்த்தமுள்ள சிங்கள ∴ தமிழ் சொற்களை தயாரிப்பதன் அடிப்படையில் 75 நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பிவைத்து 25 நிறுவனங்களிலிருந்து 95 குறியீட்டுப் பெயர்கள் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றதோடு அதில் 05 நிறுவனங்களின் குறியீட்டுப் பெயர்கள் 27 குறியீட்டுப் பெயர்களின் சொல்லாக்க நடவடிக்கைகள் நிறைவு செய்து அந் நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டது.

5000 சொற்களை கண்டுக்கொண்டு அகரவரிசையாக வகுத்தமைத்து இணையதளத்தில் வெளியிடுவதன் கீழ் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளது. சிங்கள மற்றும் தமிழ் மொழிகளை இரண்டாம் மொழியாக கற்பவர்களுக்கு ஏற்படும் சிக்கல்களை நிவர்த்தி செய்வதற்கான வசதிகளை வழங்குவதன்

பொருட்டு ''அரச சேவையில் அலுவலக கடிதங்களை எழுவதற்கான வழிகாட்டி'' என ஆராய்ச்சி நூலை தயாரித்து அச்சிடுவதற்காக வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அனைத்து மாவட்டப் பெயர்கள், நகரங்களுக்கு மற்றும் ஊர்களுக்கு பயன்படுத்தப்படும் பெயர்களை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் எழுதும்போது அங்கீகரிக்கப்பட்ட தரமான எழுத்தாக்களொன்றை தயாரித்தல் மேலும் ஒரு நோக்கம் என்பதோடு இப் பணியை நில அலவைத் திணைக்களத்தால் நாடத்தப்படுவதினால் அதற்கு திணைக்கள பிரதிநிதித்துவம் இருப்பதால் அதை செயற்படுத்தவில்லை.

**01. மொழி கொள்கைகளை தயாரிக்கும் நிகழ்ச்சித் திட்டம்**

அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பாக அங்கரிக்கப்பட்ட திட்டமொன்றுக்கமைய நடவடிக்கை எடுப்பதற்காக உத்தியோகத்தர்களை ஊக்கப்படுத்தும் நோக்குடன் திணைக்களத்திற்கான மொழி கொள்கையொன்றை தயாரிப்பதற்காக யோசனைகளை பெற்றுக் கொள்ளும் செயலமர்வொன்று 185 உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் நடாத்தப்பட்டது. அமைச்சின் ஒதுக்கிட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட இவ் அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டம் 2015.08.03 ஆம் திகதி நடைபெற்றது.

அங்கு கிடைக்கப் பெற்ற யோசனைகளின் படி மொழிக் கொள்கையொன்றை தயாரித்து வரைபை தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் மேலதிக செயலாளருக்கு சமர்பிக்கப்பட்டது. மொழி கொள்கை யோசனைகளின்படி திணைக்கள பெயர் பலகை, அறிவித்தல் பலகைகளை மும்மொழியிலும் தயாரித்து காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அரசகரும மொழிகளின் ஆவணங்கள் தொடர்பாக உத்தியோகத்தர்களின் கவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

**மொழி கொள்கைகளை தயாரிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் சில சந்தர்ப்பங்கள்**








### 4.4 தேசிய மற்றும் சர்வதேச மொழி ஆற்றலை மேம்படுத்தல்

தேசிய மற்றும் சர்வதேச மொழிகளை கற்றுக்கொள்வதற்கு விருப்பமுடையவர்களுக்காக நவீன தொழில்நுட்பத்துடனான மொழி ஆய்வுகூடமொன்றில் சிங்களம், தமிழ். ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் அரையாண்டு கற்கைநெறிகளாக நடைபெறுகின்றது. 2015 ஆம் ஆண்டில் 1500 மாணவர்களுக்கு சிங்களம், தமிழ். ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் வெற்றிகரமாக நடைபெற்றது. அவ்வாறே நு- டுநயசதைெ தொலைத்தூர கல்விமுறையை பயன்படுத்தி இருமொழி அறிவினை மேம்படுத்தும் நிகழ்ச்சியை செயற்படுத்தல் (மட்டம் 1) மற்றும் மொழி தேர்ச்சி மதிப்பீடுவதற்கு கணினியை பயன்படுத்திய பரீட்சை முறையொன்றை தாபித்தல் (பரீட்சை திணைக்களத்துடன் இணைந்து) போன்ற பணிகளை 2015 ஆம் ஆண்டில் செயற்படாததோடு புதியமொழி ஆய்வுகூடத்தை ஆரம்பித்த பிறகு நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே 2015 ஆம் ஆண்டில் 2014 ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டிக்கு உரிய சான்றிதழ் வழங்கும் வைபவம் 2015.10.26 ஆம் திகதி கௌரவ அமைச்சர் மனோ கணேசன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இங்கு 582 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

**செயற்திட்டத்தின் படியான செயலாற்றுகை**

**அரசகரும மொழிகள் திணைக்களம்**



| தொ /இல | விபரம் | உத்தேசிக்கப்பட்ட தொகை (ரூபா) | உண்மைச் செலவு (ரூபா) | வீதம் மூ |
|---|---|---|---|---|
| **01** | மொழித் தேர்ச்சியை பெற்றுக் கொள்வதற்கு உதவக்கூடிய புத்தகங்கள் மற்றும் படப் புத்தகங்களை அச்சிடலும் மொழிகள் தேர்ச்சிப் பரீட்சைகளை நடாத்தலும். | 44,403,375.00 | 43,853,335.48 | 98.76 |
| **02** | பகுதி அரச நிறுவனங்களுக்கான மொழிபெயரப்பு சேவைகளை வழங்குதல் மற்றும் கலைச்சொற்றொகுதிகளை தயாரித்தல் | 650,000.00 | 619,504.56 | 95.31 |
| **03** | மொழிப் பிரயோகம் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய கருத்தரங்கு மற்றும் ஆய்வுகளை நடத்தல். | 2,000,000.00 | 31,300.00 | 1.57 |
| **04** | தேசிய மற்றும் சர்வதேச மொழித் தேர்ச்சியை மேம்படுத்தல் | 6,700,000.00 | 6,661,939.18 | 99.43 |
| **05** | நிருவனத்தின் சூழலை நவீனமயப்படுத்தல் | 900,000.00 | 899,176.85 | 99.91 |
| **06** | அரச உத்தியோகத்தர்களின் மொழித் தேர்ச்சித் தொடர்பில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவின் விதப்புரைகளை அமுல்படுத்தல் | 15,000,000.00 | 9,000,000.00 | 60 |
| **07** | முறைமைகள் மற்றும் நடவடிக்கை முறைகள் அபிவிருத்தி மற்றும் பகுப்பாய்வு | 36,500,000.00 | 34,298,450.03 | 93.97 |
| **08** | மனித வள அபிவிருத்தி | 1,000,000.00 | 802,150.00 | 80.22 |
| | **மொத்தம்** | **107,153,375.00** | **96,165,856.10** | **89.75** |

# 05.அரசகரும மொழிகள் ஆணைக்குழு மற்றும் அதன் செயலாற்றுகைகள

## 05.அரசகரும மொழிகள் ஆணைக்குழு

### அறிமுகம்

1991 மற்றும் 18 ஆம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் மூலம் இந்த ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது. ஆணைக்குழு மாண்புமிகு ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட ஆறு உறுப்பினர்களைக் கொண்டது. இவர்களுள் ஒருவர் தலைவராக ஜனாதிபதி அவர்களால் பெயர் குறிப்பிடப்படுவார். அரசகரும மொழிகள் திணைக்களத்தின் ஆணையாளர் அதிகார பூர்வமாக ஆணைக்குழுவின் செயலாளர் ஆவார். 2014 ஆகஸ்ட் மாதம் 05ம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் ஆணைக்குழுவுக்கான புதிய தலைவர் உட்பட உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### தொலை நோக்கு

பொது மக்களுக்கு சேவை வழங்கும் அணைத்து நிறுவனங்களிலும் அரச கரும மொழிகள் கொள்கை அமுலாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக பலமிக்க நிறுவனமாதல்.

### பணிநோக்கு

அரச கரும மொழிகள் கொள்கை தொடர்பான விசாரணை கண்காணிப்பு கல்வி மற்றும் ஆலோசனை மூலம் பொதுமக்களின் இரு மொழி தேவையினை வழங்குதல்.

### நோக்கங்கள்:-

- அரசகரும மொழிகள் பயன்பாடு பற்றிக் கொள்கை அடிப்படையிலான அடிப்படைகளை விதந்துரைத்தல் மற்றும் அரசியலமைப்புத் திட்டத்தின் ஐ பாகத்தில் உட்படுத்தப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுத்துதல் பற்றி விழிப்பாயிருத்தலும் மேற்பார்வை செய்தலும்.
- (இங்கு இதன் பின்னர் தொடர்பான மொழி எனக் குறிப்பிடப்படும்.) அரசியலமைப்புத் திட்டத்தின் 18ம் பிரிவில் குறிப்பிடப்பட்ட மொழிப்பாவனை அரசியலமைப்புத் திட்டத்தின் ஐம் அதிகாரத்தின் கருத்துக்கும் எண்ணத்துக்கும் ஏற்ற விதத்தில் நடைபெறுகின்றன என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவைப்படக்கூடிய அணைத்துச் செயல்களையும் செய்தலும், நடவடிக்கை மேற் கொள்ளுதலும்.
- அரசகரும மொழிகளை மதிப்பிடுதலை உற்சாகப்படுத்துதலும் அவற்றின் நிலமை சமத்தன்மை மற்றும் பயன்படுத்தும் உரிமையினை ஏற்றல், நடாத்திச் செல்லுதல் மற்றும் முன்னெடுத்துச் செல்லுதல்.
- தனது முயற்சியினால் மற்றும் கிடைக்கும் முறைப்பாடுகளுக்குப் பதிலாக எனும் இரு முறைகளிலும் தேடுதல்களை நடாத்துதல், மற்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளினால் ஏற்படுத்தப்பட்டுள்ள படி பதிவேற்பாடுகளைச் செய்தல்.

### பணிகள்

- குறித்த மொழிகளின் ஏதாவதொரு மொழியின் அந்தஸ்த்து அல்லது பிரயோகம் தொடர்பில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய ஏதாவது கட்டளை வழிக்காட்டல்கள் மற்றும் நிர்வாக அனுபவம் தொடர்பாக மீளாய்வினை ஆரம்பித்தல்.
- குறித்த மொழிகளின் அந்தஸ்த்து அல்லது பிரயோகம் தொடர்பில் தேவையானது என ஆணைக்குழுவினால் கருதப்படக்கூடிய ஆய்வு அல்லது கொள்கை விளக்கத்தை வெளியிடல் அல்லது பயன்படுத்தல்.

- குறித்த மொழிகளின் அந்தஸ்த்து அல்லது பிரயோகம் தொடர்பில் பொருத்தமானது என ஆணைக்குழுவினால் கருதப்படக்கூடிய வெளியீடுகள் அல்லது வேறு ஊடக வெளிப்பாடுகளுக்கு
- அணுசரணை வழங்குதல் அல்லது அவற்றை ஆரம்பித்தல் உட்பட பொதுகல்வி செயற்பாடுகளில் ஈடுபடல்.
- ஏதாவது அசையும் அல்லது அசையா சொத்தை கொள்வனவு செய்து அல்லது வேறுவகையில் கைப்பற்றல் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு பெறல் அல்லது வழங்குதல் அடகு வைத்தல் வேறு வகையில் கைமாற்றுதல்.
- ஆணைக்குழுவின் நோக்கத்தை அடைந்துக் கொள்ள தேவையான பயிற்சி அல்லது ஆணைக்குழுவின் அதிகாரங்களை அமுலாக்க தேவையான அல்லது உட்படுகின்ற வேறு அணைத்து விடயங்களையும் செய்தல்.

**<u>2015ஆம் அண்டு அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்</u>**

**5.1. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை**

அரசகரும மொழிக்கொள்கையினை அரச நிறுவனத்தினுள் நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக அரச உத்தியோகத்தர்களின் பொறுப்புக்களும், சட்டரீதியான பின்னணிகளும் சம்பந்தமாக அறிவுரை புகட்டுவது இந்நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கமாகும் இந்நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தும் போது ஆணைக்குழு இரு முறைகளைப் பின்பற்றுகின்றது. அவையாவன பொதுவான அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் நடாத்துதல் மற்றும் இனங்காணப்பட்ட துறைகளுக்குரிய அரசாங்க உத்தியோகத்தர் குழுக்களுக்கு அறிவூட்டல்.

**01.மேல்மாகாணத்தின் பல்கலைக்கழக பீடாதிபதிகளுக்கும் மற்றும் பதிவாளர்களுக்கும் அரசகரும மொழிக்கொள்கை சம்பந்தமாக அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்**

கடந்த வருடங்களில் அரசகரும மொழிக்கொள்கை மீறப்பட்டமைக்காக ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளைப் பகுப்பாய்வு செய்து தேசிய பல்கலைக்கழகங்களை விசேட துறையாகக்கருதி இந்த அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

அதன்படி இச்செயலமர்வு 2015.10.08ம் திகதி ராஜகரிரிய “வங்கிக் கற்கைகளுக்கான நிலையம்” இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது. நிகழ்ச்சித்திட்டத்திற்காக மேல்மாகாணத்தின் சகல அரசாங்க பல்கலைக்கழகங்களும் அதனோடிணைந்த நிறுவனங்களும் கலந்து கொண்டன.

**கலந்துரையாடப்பட்ட விசேட விடயங்கள்**

- அரசகரும மொழிக்கொள்கையும் அதன் சட்ட ரீதியான பின்னணியும்
- பல்கலைக்கழகங்களில் அரசகரும மொழிக்கொள்கையினை நடைமுறைப் படுத்துவதற்குரிய 04.‧.2004 சுற்றறிக்கை சம்பந்தமாக பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்குத்தான் ஆரம்ப கல்வியினைப் பெற்ற மொழியிலேயே உயர் கல்வி பெற உரிமை உள்ளதெனவும்
- அரசகரும மொழிகளுக்கு குறிப்பிட்ட இடம் பல்கலைக்கழக நிர்வாகத்திலே வழங்கப்பட்டுள்ளதெனவும்

02.  

**அரசகரும மொழிக்கொள்கை சம்பந்தமாக தனியார் வைத்தியசாலைத் தலைவர்களுக்கு அறிவூட்டல்.**

தற்போது தனியார் பிரிவு அனேகமாக பொதுமக்களுக்காக பல வகையான சேவைகளை நல்குகின்றது. சுகாதாரத்துறை இதனுள் விசடமானதாகும். அதிகமான தனியார் மருத்துவமனைகள் ஆங்கில மொழிக்கு முக்கியத்துவம் வழங்கி சேவைகளை வழங்கும் காரணத்தினால் பொதுமக்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்த சந்தர்ப்பங்களை ஆணைக்குழு அவதானித்துள்ளது. இதனால் கொழும்பு மாவட்டத்தினுள் அமைந்துள்ள முதற்தர தனியார் மருத்துவமனைகளுக்கான அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் 2015.08.28ம் திகதி ராஜகிரிய “வங்கிக் கற்கைகளுக்கான நிலையம்” இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக தனியார் மருத்துவமனைகளின் 27 அளவிலான உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். அதேபோன்று தனியார் மருத்துவமனையின் வழிகாட்டி நிறுவனமான சுகாதார அமைச்சின் தனியார் வைத்திய சேவை அபிவிருத்திப் பிரிவின் உத்தியோகத்தர்களும், தனியார் மருத்துவமனைகள் மற்றும் தாதியர் விடுதிகள் சங்கத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதன் தலைவரும் பங்குபற்றினர்.

அரசகரும மொழிக்கொள்கை சம்பந்தமாக ஆரம்ப அறிவூட்டல் நிகழ்ந்ததோடு அதன் பின்னர் வினாக்களும், கலந்துரையாடல்களும் நடைபெற்றன. இங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்கள் கீழே உள்ளன.

- இருமொழித்திறனற்ற வைத்தியர்களின் உதவிக்காக மொழிபெயர்ப்பாளரின் உதவியினைப் பெறுதல்
- அறிவிப்பு நடவடிக்கைகள் மும்மொழிகளிலும் நடைபெறாமை
- பெயர்ப்பலகைகள், அறிவித்தல் பலகைகள், தகவல் பெயர்பலகைகள் மும்மொழிகளிலும் காட்சிப்படுத்தாமை.
- மும்மொழிகளில் கடமை செய்யக்கூடிய உத்தியோகத்தர் பற்றாக்குறை
- சில தொழில்நுட்ப சொற்களை மொழிபெயர்த்துப் பாவிப்பதற்கு முடியாமை.

**நிகழ்ச்சித்திட்டத்தின் முடிவு (ழுரவ உழஅநள)**

நிகழ்ச்சித்திட்டத்தின் பின் ஆணைக்குழுவினால் கீழ்க்காணுபவைகள் எதிர்காலத்தில் செயற்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

- கலந்து கொண்ட தனியார் மருத்துவமனைகள் பொதுமக்களுக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ள சகல பெயர்ப்பலகைகளும் குறிப்பிட்ட காலத்தினுள் அரசகரும மொழிக்கொள்கைக்கு ஏற்ப தயாரிப்பதற்காகவும், அறிவிப்புக்கள் மும்மொழிகளிலும் நடாத்துவதற்காக தனியார் சுகாதார சேவைகள் வழிகாட்டி ஆணைக்குழுவின் மூலம் சிபார்சினை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வதும், மேற்பார்வையும்

- மேற்படி சிபார்சுகள் நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக சுகாதார அமைச்சின் தனியார் வைத்திய அபிவிருத்தி பிரிவின் ஒத்துழைப்பினையும் பெறுதல்





**03.கொழும்பு மாநகர சபை உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம்**

தேசிய உரையாடல் சம்பந்தமான கௌரவ அமைச்சரின் ஆலோசனையின்படி இருமொழிகள் நிர்வாகப் பகுதிகளில் அமைந்துள்ள அரச நிறுவனங்களில் வெளிக்கள உத்தியோகத்தர்கள் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் நிரலில் ஒரு நிகழ்ச்சித்திட்டம் கொழும்பு மாநகர சபையின் உத்தியோகத்தர்களும் மற்றும் அதனோடிணைந்த வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் 2015.11.30ம் திகதி கொழும்பு மாநகர சபையில் பயிற்சியளிக்கும் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.

அதற்காக தேசிய சகவாழ்வு உரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் கௌரவ அமைச்சர் மனோ கணேசன் அவர்கள், அமைச்சின் செயலாளர், அரசகரும மொழிகள் ஆணையாளர், மற்றும் தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி உத்தியோகத்தரும் கலந்து கொண்டனர். அங்கு அரசகரும மொழிக்கொள்கை சம்பந்தமாக கலந்து கொண்டவர்களுக்கு அறிவூட்டிய பின்னர் அரசகரும மொழிக்கொள்கையினை நடைமுறைப்படுத்தும் போது உத்தியோகத்தர்கள் முகங்கொடுக்கும் சிக்கல்களையும், அதற்கான பரிகாரங்களும் கலந்துரையாடப்பட்டன.

## 5.2 மொழி ஆய்வு

01.2014 வரை ஆய்வுக்குட்படுத்திய நிறுவனங்களில் அரசகரும மொழிக்கொள்கையினை நடைமுறைப்படுத்தியது சம்பந்தமாக மீளாய்வு செய்தல்

2014ம் வருடம் வரை ஆய்வுக்குட்படுத்திய நிறுவனங்களுக்காக ஆணைக்குழு சிபார்சு வழங்கியுள்ளது. இச்சிபாரிசினை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக குறித்த நிறுவனத் தலைவர்கள் ஆணைக்குழுவுக்கு அறிக்கையிட வேண்டும்.

சிபார்சு நடைமுறைப்படுத்தல், பரீட்சித்தல், மீளாய்வு என்பன மொழி ஆய்வின் நோக்கமாகும்

2015 ம் வருடத்தில் நடாத்தப்பட்ட மீளாய்வு மொழி ஆய்வு கீழே காட்ப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் காரியாலயங்கள்

1. தெல்தோட்ட
2. அக்குரன
3. உடபளாத்த
4. அம்பன்கோரளை
5. உக்குவளை
6. ஹங்குரன்கெத்த
7. கொத்மலை
8. அம்பகமுவ
9. உடுநுவர
10. தொமுவ
11. கங்க இஹல கோரலே
12. நீர்கொழும்பு
13. யாழ்ப்பாணம்
14. மாத்தளை
15. பதுளை
16. பஸ்ஸர
17. ஹாலிஎல
18. எல்ல













பொலிஸ் நிலையங்கள்

1. கொத்மலை
2. நீர்கொழும்பு







02.இருமொழிகள் நிர்வாக பகுதிக்குள் ஆய்வுக்குட்படுத்தாத அரச நிறுவன ஆய்வு

பிரதேச செயலாளர் காரியாலயங்கள்

1. ஹம்பாந்தோட்டை
2. கதிர்காமம்
3. தனமல்வில




பொலிஸ் நிலையங்கள்

1. கண்டி
2. அளவத்துகொட
3. உக்குவளை
4. ரத்தோட்டை
5. ஹங்குரன்கெத்தை
6. யாழ்பாணம்
7. ஹம்பாந்தோட்டை
8. கதிர்காமம்
9. தணமல்வில
10. பதுளை
11. பஸ்ஸர







வைத்தியசாலைகள்

1. கண்டி பொது வைத்தியசாலை
2. பேராதனை போதனா வைத்தியசாலை
3. மாத்தளை மாவட்ட வைத்தியசாலை
4. உக்குவளை பி. வை. ச பிரிவு
5. றிகில்லஹஸ்கட ஆரம்ப வைத்தியசாலை
6. அம்பகமுவ சுகாதார வைத்திய உத்தியோகத்தர் காரியாலயம்







நிறுவனங்கள்

1. சீகிரிய உலக உரிமை
2. கொழும்பு பல்கலைக்கழகம்
3. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
4. மத்தள மஹிந்த ராஜபக்' சர்வதேச விமான நிலையம்























## 5.3. அச்சிட்ட ஊடக அறிவிப்புக்கள்

இலங்கை மக்களால் நினைவு கூரப்படும் முக்கியமான விழாக்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் ஏற்படும் தினங்களை நோக்கமாகக் கொண்டு அச்சிட்ட ஊடகங்களில் ஆணைக்குழு அறிவித்தல்கள் பிரசுரிக்கின்றன. இந்த அறிவித்தல்கள் மொழி உரிமைகள் மற்றும் அரசகரும மொழிக்கொள்கைகளை பற்றி அறிவூட்டும் முக்கியத்துவத்தினைக் குறிப்பிட்டு வாழ்த்துச் செய்தியினையும் உட்புகுத்தி அச்சிட்ட ஊடக அறிவித்தல்கள் இரண்டு 2015ம் வருடத்தில் பிரசுரிக்கப்பட்டன.

01. நாடளாவிய ரீதியில் பொதுமக்களுக்கு அறிவூட்டுதல்

- அச்சிட்ட ஊடக அறிவித்தல்கள்

அச்சிட்ட ஊடக அறிவித்தல்கள் பிரசுரிக்கும் போது முக்கிய நோக்கம் இரண்டாகும். அதில் ஒரு நோக்கம் என்னவெனில் தமது மொழி உரிமைகளை மக்களுக்கு அறிவூட்டிவிடுவதன் மூலம் இருமொழி அரச சேவைகளில் பொதுமக்களின் விருப்பத்தினை அதிகரிக்கச் செய்தல் இருமொழிகளிலான பொதுமக்கள் சேவையினை வழங்குவது சம்பந்தமாக அரச ஊழியர்களுக்கு இருக்கும் சட்டரீதியான பிணைப்பினைப்பற்றி அறிவூட்டுதல் அடுத்த நோக்கமாக காட்ட முடியும்.

இலங்கை மக்களின் பிரதான சமய கலாச்சார மற்றும் தேசிய முக்கியத்துவமான தினங்களை நோக்கமாகக் கொண்டு இந்த அறிவித்தல்கள் இருமொழிகளிலும் பிரசுரிக்கப்படும் அத்தினங்களில் வாழ்த்துச் செய்திகளும் மக்களின் மொழி உரிமைகள் சம்பந்தமாகவும் அரச உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கள் சம்பந்தமாக செய்திகளும் இந்தச் செய்திகளில் உள்ளடக்கப்படும். அதன்படி 2015ம் வருடத்தில் பிரசுரிக்கப்பட்ட இவ்வாறான அறிவித்தல்கள் கீழே உள்ளபடியாகும்.

- தீபாவளி பண்டிகைக்கான வாழ்த்துக்கள்

- பொ‘ன் போயாவுக்கான வாழ்த்துக்கள்







## 5.4. முறைப்பாடு விசாரணை

மொழி உரிமைகளை மீறியமை சம்பந்தமாகக் கிடைக்கும் பொதுமக்கள் முறைப்பாடுகள் விசாரணை செய்தல் ஆணைக்குழுவின் ஆரம்ப நடவடிக்கையாகும்.

அதன்படி 2015ம் வருடத்தினுள் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவுக்கு 91 முறைப்பாடுகள் கிடைத்ததோடு முறைப்பாடுகள் 46 தீர்க்கப்பட்டுள்ளன.

## 5.5. பாடசாலை மட்டத்தில் மொழிச்சங்கங்கள் உருவாக்குவதை விருத்தி செய்யவும் பாடசாலைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் அச்சகங்கள் மூலம் நடைமுறைப்படுத்தல்.

2013 மற்றும் 2014ம் வருடங்களில் ஆணைக்குழு ஏற்பாடு செய்யப்பட்ட பாடசாலை விவாதப் போட்டிகளும், பேச்சுப்போட்டியின் அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைச் சிறார்களுக்காக நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தும் முக்கியத்துவம் ஆணைக்குழுவின் கவனத்தை ஈர்ந்தது. இதன் எதிர்கால நடவடிக்கையாக பாடசாலையினுள் மொழிவிருத்தி சங்கங்களை உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அரசகரும மொழிக்கொள்கை சம்பந்தமாக பாடசாலைப் பிள்ளைகளின் அறிவு, உளப்பாங்கு, புரிந்துணர்வு என்பன விருத்தி செய்வதன் மூலம் மும்மொழிச் சூழலை இலங்கையினுள் ஸ்தாபிக்கும் நீண்டகால நோக்கத்துடன் மொழிச் சங்கங்கள் அமைப்பதற்காக அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.


இதன்கீழ் நாட்டின் சகல பாடசாலைகளிலும் மொழிச் சங்கங்கள் அமைப்பதற்கு அரசகரும மொழிகள் ஆணைக்குழு எதிர்பார்கிறது. இங்கு பாடசாலையினுள் பிரதான பெயர்ப்பலகை காட்சிப்படுத்தலில் இருந்து பாடசாலையினுள் நடத்தப்படும் சகல நடவடிக்கைகளும் இருமொழிகளிலும் நடாத்த உரிய நடவடிக்கைகள் மொழிச் சங்கங்களின் மூலம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இருமொழிகளால் இதயபூர்வமாக இணைந்த இலங்கை தேசத்தினைத் தோற்றுவிக்கும் நோக்கத்தினுள் மாணவர் பரம்பரையையும் ஈடுபடுத்தவும் பாடசாலை மாணவர்களுள் மும்மொழிப் பாவனை சம்பந்தமாக உளப்பாங்கு மற்றும் முயற்சியினை உருவாக்குவதற்காகவும் பாடசாலைகளில் கேட்கும், காணும், பேசும் சகலவற்றிலும் மும்மொழிகளிலும் செயற்படவும் எதிர்கால சமூகம் மும்மொழிச் சமூகமாக உருவாக்கும் திறனை விருத்தி செய்வதற்காகவும் மொழிச் சங்கங்கள் அமைப்பது நோக்கமாகும்.

மொழிச் சங்கங்கத்தினுள் அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் ஒவ்வொரு தரத்திலும் ஒரு மாணவராக மாணவர் பிரதிநிதித்துவத்தினைக் கொண்ட உத்தியோகத்தர்களை உள்ளடக்கி இருக்கும் மொழிச்சங்கங்கள் மூலம் நடைமுறைப்படுத்துவதற்கு இனம் காணப்பட்ட

செயற்பாடானது பாடசாலைகளின் பிரதான பெயர்ப்பலகையில் இருந்து ஏனைய சகல பெயர்ப்பலகைகளும் மும்மொழிகளிலும் காட்சிப்படுத்தல், பாடசாலையினுள் நடைபெறும் சகல நடவடிக்கைகளிலும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் பாவித்தல் மும்மொழிப் போட்டிகள் நடாத்தி வெற்றியீட்டியவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்குதல். மும்மொழி அரிச்சுவடிகள் பாடசாலையினுள் காட்சிப்படுத்தல் மற்றும் தினமும், வாராந்தம், மாதாந்தம் சொற்களும் மற்றும் வாக்கியங்களும் உருவாக்குதல் மற்றும் அதற்காக புள்ளிகள் வழங்கி வெற்றி பெற்றவர்களுக்கு ஊக்கப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துதல், ஏனைய மொழிகளில் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்கின்ற நட்பு பாடசாலைகளுடன் கலாச்சார மற்றும் சமூக உறவுகளைப் பரிமாறும் நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல், தேசிய விழாக்களில் மும்மொழிகளை ஈடுபடுத்தி செயற்படுதல், சூழலில் உள்ள மக்களின் மொழித் தேவைகளில் அவைகளுக்கு உதவி வழங்குதல் உட்பட மேலும் செயற்பாடுகள் அனேகம் செய்தல் மொழிச் சங்கங்கள் அமைப்பதற்காக அரசகரும மொழிகள் ஆணைக்குழு கல்வி அமைச்சுடன் சம்பந்தப்பட்டு குறித்த விடயத்தினை நடைமுறைப்படுத்தல் இதற்காக கல்வி அமைச்சினால் பாடசாலைகளுக்கு சுற்றறிக்கைகளை வழங்கியுள்ளது. அச்சுற்றறிக்கையின்படி இதுவரை சில பாடசாலைகள் தம் வருடாந்த செயற்பாட்டுத்திட்டத்தினை ஆணைக்குழுவிற்குச சமர்ப்பித்துள்ளன.

## செயற்திட்டத்தின் படியான செயலாற்றுகை
## அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் பொருளாதார முன்னேற்றம்



| தொ /இல | விபரம் | உத்தேசிக்கப்பட்ட தொகை (ரூபா) | உண்மைச் செலவு (ரூபா) | முன்னேற்றம் மூ |
|---|---|---|---|---|
| 01 | பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கு விழிப்பூட்டுதல் | 350,000.00 | 205,000.00 | 58.57 |
| 02 | வைத்தியசாலை பணிக்குழுக்களுக்கு விழிப்பூட்டுதல் | 175,000.00 | 177,500.00 | 101.43 |
| 03 | 2014 வரை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்களில் அரசகரும மொழிகள் கொள்கை அமுல்படுத்துவது தொடர்பில் எழுமாற்று மாதிரிகளை மீளாய்வு செய்தல். | 600,000.00 | 305,000.00 | 50.83 |
| 04 | இரு மொழி நிருவாகப் பிரிவுகளில் ஆய்வுக்கு உட்படுத்தப்படாத அரச நிறுவனங்களில் ஆய்வு நடத்தல் | | | |
| 05 | அரசகரும மொழிகள் கொள்கை மீறுதல் தொடர்பில் பெறப்படும் முறைப்பாடுளை விசாரணை செய்தல் | 500,000.00 | - | - |
| 06 | பாடசாலை மட்டத்தின் மொழி குழு வட்டங்களை ஏற்படுத்தல் மற்றும் அவ் வட்டத்தினூடாக நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல். | 600,000.00 | - | - |
| 07 | நாடளாவிய ரீதியில் மக்களுக்கு விழிப்பூட்டல் (அச்சு ஊடகம் விளம்பரம்) | 1,000,000.00 | 188,000.00 | 18.8 |
| 08 | சமூக ஒருமைப்பாட்டு வாரம் | 400,000.00 | - | - |
| 09 | அரச உத்தியோகத்தர்களுக்கு விழிப்பூட்டல். | 300,000.00 | 70,000.00 | 23.33 |
| | **மொத்தம்** | **3,925,000.00** | **945,900.00** | **24.10** |
| | | | | |

# 06. தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம் மற்றும் அதன் செயலாற்றுகைகள்

**06.தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம்**

**அறிமுகம்**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் மும்மொழிகள் கொள்கையை அமுல்படுத்துவதற்கான தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்காக, 2007ஆம் ஆண்டு 26ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவக சட்டத்தின் கீழ் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழான ஒரு நியதிச் சட்ட நிறுவனமாக தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம் தாபிக்கப்பட்டது.

2007 நவம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து இந் நிறுவனம் அரசியலமைப்பு விவகார மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டது. 2010 ஏப்பிரல் மாதம் 25ஆம் திகதியில் இருந்து குறித்த அமைச்சு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு என பெயர் மாற்றப்பட்டதுடன் இந் நிறுவகம் அவ் அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்களில் ஒன்றாகியதுடன், 2015 ஜனவரி 18ஆம் திகதியில் இருந்து இந் நிறுவகமானது பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் ஜனநாயக ஆட்சி அமைச்சின் கீழ் செயற்பட்டது. 2015 செப்டம்பர் 21ஆம் திகதியில் இருந்து குறித்த நிறுவகம் தேசிய கலந்துரையாடல் அமைச்சின் கீழ் செயற்பட்டதுடன் தற்போது அதாவது 2015 டிசம்பர் 18ஆம் திகதியில் இருந்து தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் கீழ் செயற்படுகிறது.

தற்போது இந் நிறுவகமானது இல. 40, புத்கமுவ வீதி, இராஜகிரிய என்ற இடத்தில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது நிறுவகமானது தனது செயற்பரப்பை விரிவுப்படுத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றை நாடு தழுவிய ரீதியில் அமுல்படுத்தி வருகின்றது. அவற்றில் கீழ் வரும் பயிற்சி கற்கைநெறிகள் முக்கியமானவைகளாகும்:

- அரச உத்தியோகத்தர்களுக்கான பகுதி நேர மொழிக் கற்கைநெறி (மட்டம் ஐ, மட்டம் ஐஐ, மட்டம் ஐஐஐ)
- அரச உத்தியோகத்தர்களுக்கான 12 நாட்கள் குறுங்கால தங்குமிடமற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.
- ஆசிரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.
- வளவாளர்களுக்கான மீளாய்வு நிகழ்ச்சித்திட்டம்.
- மொழிபெயர்ப்பு பற்றிய டிப்ளோமா கற்கைநெறி (பகுதி நேரம்.:. முழு நேரம்)
- அடிப்படை மொழிபெயர்ப்பு நிகழ்ச்சித்திட்டம் ( 10 நாட்கள் தங்குமிடமற்ற)
- சிங்கள.:. தமிழ் பேச்சு பயிற்சி கற்கை
- புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்கப்படும் குறுங்கால இரண்டாம் மொழி கற்கைநெறி. (வைத்தியர்கள், பொது நிர்வாக உத்தியோகத்தர்கள், பிற உயர்தொழில்களை மேற்கொள்பவர்கள்)

